Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-08 | 23-12-2004 | வியாழக்கிழமை | ஓசை -309




## தென்மராட்சியில் எழுச்சிகர நிகழ்வு

# அரசின் போக்கைக் கண்டித்து கைதடியில்

# கைகோர்த்து நின்று மக்கள் போராட்டம்!

## நாளை கொடிகாமத்தில் நடத்த ஏற்பாடு

(தென்மராட்சி)

**சமாதான வழிமுறைகளை ஒதுக்கிவிட்டு போருக்கான தயாரிப்புக் களில் சிறிலங்கா அரசு ஈடுபடுவதைக் கண்டித்தும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கோரியும் தென்மராட்சிப் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது மனித சங்கிலிப் போராட்டம் நேற்றுக் கைதடியில் எழுச்சிகரமாக இடம் பெற்றது.**

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்றாவது மனித சங்கிலிப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை கொடிகாமத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டத் தின் தொடர்ச்சியாக நேற்றுக் கைதடியில் நடைபெற்ற போராட்டத்தில்,

(12 ஆம் பக்கம் பார்க்க)






## சுயாட்சி வழங்காவிட்டால் தமிழ் மக்கள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பர்

### -கைதடி மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பா.உ கஜேந்திரகுமார்

அமைதியை விரும்புகின்ற தமிழ் மக்களை அரசாங்கம் இனி யும் ஏமாற்றமுடியாது சுயாட்சி இல்லையேல் சுதந்திரப் பய ணத்தை மக்கள் முன்னெடுப்பர் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று தென்மராட்சி பொது அமைப்புக்களால் கைதடியில் முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச் சிப் போராட்டத்தின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்திற்கு யாழ்.இடம்பெயர்ந்தோர் ந.ச ஏற்பாடு!

(அலுவலக செய்தியாளர்)

யாழ்குடா நாட்டு மக்கள் அனை வரும இணைந்து அரசாங்கத்திற் கும், இராணு வத்தினருக்கும் எதி ராக போராட்டம் ஒன்றினை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம் இவ் வாறு யாழ்.இடம்பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத்தலைவர் தெரி வித்துள்ளார்.

நேற்று யாழ்.இடம்பெயர்ந் தோர் சங்கத் தலைவர் தலைமை யிலான குழுவினர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வடமராட்சியில் வரும் புதன் மக்கள் எழுச்சிப் போராட்டம்

வடமராமட்சி பருத்தித்துறையில் எதிர்வரும் 29 ஆம் திகதி மாபெரும் எழுச்சிப் போராட்டம் ஒன்றை நடாத்துவதற்கு வடமராட்சிப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

அரசாங்கம் போராயத்த நடவடிக்கைகளைக் கைவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக்கூட்டமும் நடுகல் திரை நீக்கமும்

(அலுவலக செய்தியாளர்)

17.09.1999 அன்று தென்மராட்சி பகுதியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர் கப்டன் சர்வன்/ களவொளி(கோவிந்தசாமி சண்மு கதாசன்) என்ற மாவீரனின் நினைவுக் கல் நேற்றுக் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது. முன்ன

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேகுறித்த ஜே.வி.பியின் விமர்சனம் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்

### - அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வேயின் பங்கு பற்றிய ஜனதாவிமுக்தி பெரமுனவினரின் அண்மைய அறிக்கை சமாதான முன்னெடுப்புக்களைப் பாதிக்கும் இது எமது பார்வையில் நோர்வேயின் செயற்பாடுகளை பழி சொல்லுவது மட்டுமன்றி சமாதான முன்னெடுப்புக்களிற்குப் பிழையான அர்த்தத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவு என்றும் அமெரிக்கத் தூதுவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் யோசனைகளில் ஆக்கபூர்வமானது எதுவுமில்லை!

### -புலிகள் வட்டாரங்களிலிருந்து தகவல்

(கிளிநொச்சி)

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கம் முன் வைத்த நிகழ்ச்சி நிரலில் ஆக்க பூர்வமானது எதுவும் இல்லை. என விடுதலைப்புலிகளின் வட் டாரங்களிலிருந்து தெரிய வரு கின்றது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் ஊடாக அரசாங்கம் எதிர்காலச் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் நிகழ்ச்சி நிரலொன்றை சமர்ப் பித்திருந்தது தெரிந்ததே.

அரசாங்கத்தின் சமாதானச் செயலகத் தலைவர் ஜெயந்த தனபால மூலம் எரிக்சூல் ஹெய் மிடம் கையளிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலைத் திங்களன்று விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. இல.4 சிறி 4611, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. எஸ்.அருள் நாதன், இல 117, நாதன்ஸ் ,குட் செட்செட்றோட் வவுனியா. (5410)

### வீடு விற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றுக்கருகாமையில் 1/4ஏக்கர் காணி, வீடு, கிணறு, மலசலகூடம் என்பனவற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு உரிமையாளர் "இனியவள் அழகுமாடம்" முல்லைத்தீவு. உரிமையாளர் இன்பம் மணிக்கூட்டுத்திருத்தகம், புதுக்குடியிருப்பு. (5071)


# அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் மன்னார் மீனவர்களின் வள்ளங்கள் மீது தாக்குதல்

இராமேஸ்வரத்திற்கும், கச்சதீவுக்குமிடையே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள், இலங்கை மீனவர்களின் வள்ளங்களையும் சேதப்படுத்தியுள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது

கடந்த திங்கட்கிழமை இரவு 500 இற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் இராமேஸ்வரத்திற்கும், கச்சதீவுக்கும் இடைப்பட்ட பகுதியில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டனர். அத்தோடு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மன்னார் பேசாலை மீனவர்களின் வள்ளங்களைச் சேதப்படுத்தியுமுள்ளனர். இச்சம்பவத்தால் பீதியுற்ற மீனவர்கள் கடலில் குதித்துள்ளனர். பின்னர் ஏனைய மீனவர்களால் ஒரு மணி நேரம் கழித்தே இவர்கள் மீட்கப்பட்டனர்.

இதேவேளை எமது தாயகப் பகுதியில் பயத்துடனேயே நாம் தொழில் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தும் எமது இந்த நிலையினை மாற்ற சம்பந்தப்பட்ட எவரும் அக்கறை கொள்ளாமல் உள்ளமை மிகவும் வேதனைக்குரியதெனத் தலைமன்னார் பேசாலை மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (18)

# 13 வயது சிறுமிக்குத் திருமணம் செய்து வைத்தோர் காவல்துறையால் கைது

13 வயதுடைய பாடசாலை மாணவிக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து உடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினர் சம்பந்தப்பட்ட மணமகனையும், பெண்ணின் தாயாரையும் திருமணத்திற்கு உடந்தையான சிலரையும் கைது செய்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமியையும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் பெண்ணின் வயதைப் பொய்யாகக் கூறி முள்ளியவளைப் பகுதியில் வைத்து திருமணப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளமையும்,விசாரணையில் இருந்து தெரியவந் துள்ளது. சந்தேக நபர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப் பட்டுள்ளனர்.

சிறுவர் உரிமைகளைப் பேணுவதில் தமிழீழ காவல்துறையினர் எப்போதும் விழிப்புடன் இருப்பதாகவும், இவ்வாறான செயல்களில் ஈடுபடும் எவர் மீதும் கடுமையான சட்டநடவடிக்கைஎடுக்கப்படும் எனப் புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

-முன்பள்ளியிலிருந்து -

# பாடசாலை செல்லும் மாணவருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டுப் பிரிவின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளி. மாவட்டக்கிளையினால் நடாத்தப்படும் முன்பள்ளியில் கல்வி கற்று ஐந்தாவது அகவையினைப் பூர்த்தி செய்து 2005ஆம் ஆண்டில் ஆரம்ப பாடசாலை செல்லவுள்ள மாணவர்களுக்கு, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட செயலாளர் கணேஸ் தலைமையில் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க வளாகத்திலும் ஸ்கந்தபுரம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க முன்பள்ளி வளாகத்திலும் நடைபெற்றன. ஐம்பத்தேழு மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் முன்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களின் பெற்றோரும் கலந்து கொண்டனர். (சு)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

சாவற்காடு மன்னார் எனும் முகவரியைச் சேர்ந்த (யுவுல்நாடார்-இராசரத்தினம்) என்பவரது தேசிய அடையாள அட்டை ஜெயபுரத்திற்கும் முழங்காவிலுக்குமிடையில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் கிளிநொச்சி ஏ9 சாலையிலுள்ள ஈழநாதம் பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (சு)

## கண்டெடுப்பு

கடந்த12.12.2004அன்று சோதியா படையணிப் போர்ாளி . வரதா என்பவரால் புதுக்குடியிப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு,உரியவரினைக் கண்டுபிடித்து ஒப்படைக்குமாறு புதுக்குடியிருப்பு காவல்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு காவல்பணிமனைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# துணுக்காய் ஐயன்கன்குளத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்கு நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு துணுக்காய்ப் பிரதேசத்தில் ஐயன்கன்குளம் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ. புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரையினை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பொழிலன், முல்லைமாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் ஐயன்கன்குளம் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் உறுப்பினர்களும்,பொதுமக்களும் கலந்து கொண்டனர். (24)

# புவியியல்,வரலாறு,குடியியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தரம் 7இல் சமூகக்கல்விப் பாடத்திற்குப் பதிலாக அறிமுகப் படுத்தப்படவுள்ள புவியியல்,வரலாறு,குடியியல் ஆகிய பாடங்களை அறிமுகப்படுத்தல் தொடர்பான செயலமர்வு 24,25,26 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி, இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளதால் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் மேற்படி பாடங்களைக் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களைத் தவறாது இப் பயிற்சியில் கலந்து கொள்ளும் படியும் தென்மராட்சி வலயக்கல்வி அலு வலகம் தெரிவித்துள்ளது. தென்மராட்சியில் தரம் 7இற்குமேல் வகுப்புக்களைக் கொண்ட 33 பாடசாலைகள் உள்ளதாகத் தெரியவருகிறது. (28)

# புதுக்குடியிருப்பு காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளக் கோரல்

புதுக்குடியிருப்பு, 09ஆம் வட்டாரம், உதயசூரியன் கலாமன்றத்திற்கு அருகாமையில் வசித்து வந்த ஆறுமுகம் சண்முகராசா அல்லது இங்கிலிஸ் வாத்தியார், இவரது மனைவி சண்முகராசா இராசலட்சுமி அல்லது ரீச்சர் ஆகியோரிடம் அடகு வைக்கப்பட்ட நகைகள், மற்றும் பொருட்களை மீளளிப்பது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, சம்பந்தப்பட்ட அனைவரையும் எதிர்வரும் 31.12.2004 ஆம் திகதிக்கு முன்னர் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

# மழைநீர் சேகரிப்பு தொடர்பான கருத்தரங்கு

மழைநீர் சேகரிப்புத் தொடர்பான கருத்தரங்கு இன்று முற்பகல் 10.00 மணிக்கு கிளி.அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன் காரணமாக இன்று நடைபெறவிருந்த மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நடைபெறமாட்டாதெனவும் மழை நீர் சேகரிப்புத் தொடர்பான கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டோர் தவறாது இன்று சமுகமளிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)


## தமிழ்ப் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப் படுகின்றன.

**தகைமைகள்**

01 கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
அகவை:-18 தொடக்கம் 23வரை

**குறிப்பு:**

01.வேண்டுகை முடிவு நாள்-31.12.2004
02.நேர்காணல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்
03.நேர்காணல் நடைபெறும் இடம்:-
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

04. நேர்காணலுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ் (க.பொ.த.சா/த, க.பொ.த உ/த), பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் அவற்றின் நிழற்படிகளையும் கொண்டு வருக.

05. பயிற்சிக் காலத்தில் மாதந்தோறும் உரூபா 5,000.00 உதவு தொகையாக வழங்கப்படும். தங்குமிட வசதி உண்டு.

06. வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

07. பயிற்சிக்காலம்: ஓர்ஆண்டு

08. பயிற்சியின் பின் ஐந்தாண்டுகள் நிதித்துறையிற் பணியாற்றுதல் வேண்டும்.

09. பயிற்சியின் நிறைவில் தகைமைச்சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறைச் சம்பளத் திட்டத்திற்கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.

10. தமிழ்மொழியிற் பற்றுடையவராகவும், ஆற்றலுடையவராகவும், தொடர்ந்து கற்கும் விருப்பமுடையவராகவும் அடையாளம் காணப் படுவோர் தமிழிற் சிறப்புக்கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆளுநகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி.10990)



## தமிழீழப் போக்குவரவுக் கழகம்
## பருவகாலச்சீட்டுப் பெறுவோர் கவனத்திற்கு

* 01.01.2005 ஆம் நாளிலிருந்து பேருந்துக் கட்டணத்தில் 75% பணத்திற்கு பருவகாலச்சீட்டு வழங்கப்படும். இதனைப் பெறவிரும்புவோர் பணிசெய்யும் நிறுவனப் பொறுப்பாளர் அவர்களுக்கு கடிதம் எழுதி, அவரால் அக் கடிதத்தில் நிறுவன முத்திரை பொறிக்கப்பட்டு பரிந்துரை செய்த கடிதத்தினை சீட்டுப் பெறும் இடங்களில் கையளித்தல் வேண்டும்

* பாடசாலை மாணவர்களுக்கு அதிபர் அவர்களின் பரிந்துரைக் கடிதத்துடன் வழமை போல் உரூபா 25/= பணத்திற்கு வழங்கப்படும்.

* ஒவ்வொரு மாதமும் 25 ஆம் நாள் தொடக்கம் 30 ஆம் நாள் வரை பின்வரும் இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

01. முல்லைத்தீவு பேருந்து நிலையம்
02. புதுக்குடியிருப்பு பேருந்து நிலையம்
03. பனை பேருந்து நிலையம்
04. கிளிநொச்சி பேருந்து நிலையம்
05 புளியங்குளம் பேருந்து நிலையம்
06. மல்லாவி பேருந்து நிலையம்
07. வெள்ளாங்குளம் பேருந்து நிலையம்
08. உயிலங்குளம் பேருந்து நிலையம்

தமிழீழப்போக்குவரவுக் கழகம்
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10991)



மொசூலில் தீவிரவாதிகளின் ரொக்கெட் மற்றும் பீரங்கித்தாக்குதலில் சேதமான அமெரிக்கத்தளத்தின் ஒரு பகுதியையும் தாக்குதலில் காயமடைந்த படையினர் அவசரஅவசரமாக அகற்றப்படுவதனையும் படைவீரர் ஒருவருடைய சடலத்தையும் படங்களில் காண்க.

# ஈராக் மொசூலில் அமெரிக்கத் தளம் மீது தாக்குதல் 18 அமெரிக்கப் படையினர் உட்பட 22 பேர் பலி!

### 70 இக்கு மேற்பட்டோர் காயம்

(பாக்தாத்)

**ஈராக்கின், மொசூல் நகரில் அமெரிக்க இராணுவத்தளம் மீது நடைபெற்ற ரொக்கெட் மற்றும் பீரங்கித் தாக்குதலில் 18 அமெரிக்கப்படையினர் உட்பட 22பேர்கொல்லப்பட்டனர். 70இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.**

ஈராக்கில் வடக்குப் பகுதியில் உள்ள நகரில் அமெரிக்க இராணுவத்தின் மிகப்பெரிய தளம் உள்ளது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடைபெற்றது. ரொக்கற் மற்றும் பீரங்கிகளால் அடுத்தடுத்து தாக்குதல் நடந்தது. இதில் 22 பேர் பலியாகினர். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலை பென்டகன் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். எனினும் இறந்தவர்கள் குறித்தவிபரங்களை அவர்கள் தெரிவிக்கவில்லை.

இதுகுறித்து மொசூல் நகரில் உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில் "அமெரிக்க இராணுவத்தளம் மீது அவ்வப்போது தாக்குதல்கள் நடைபெறும் ஆனால் இதுவரை குறி பார்த்து எந்தத் தாக்குதலும் நடக்கவில்லை. முதன் முறையாக இது போன்ற தாக்குதல் நடந்துள்ளது. தாக்குதல் நடைபெற்றபோது சாப்பாட்டு வேளை. எனவே சாப்பிடும் அறையைக் குறி பார்த்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்," என்றார்.

ஈராக்கில் சதாம்ஆட்சி ஒழிக்கப்பட்டுவிட்டாலும் அவரது ஆதரவுத் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவருகின்றனர். அல்-குவைதா மற்றும் அல்-முசாப் சர்காவியின் இயக்கத்தினர் தொடர்ந்தும் அமெரிக்கப்படைகள் மீது தாக்குதல் நடத்திவருகின்றனர். பலூஜா நகரை அமெரிக்க இராணுவம் முழுமையாகத் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதால் அங்கிருந்த தீவிரவாதிகள் மொசூல் நகருக்கு இடம் பெயர்ந்துவிட்டனர். இதனால் இந்தத் தாக்குதலின் பின்னணியில் அல்-சர்க்காவியின் தீவிரவாதிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

மேலும் ஈராக்போரில் அமெரிக்கப்படையினர் சந்தித்த மிகப் பெரியஇழப்பு இதுவென்றும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

### 6 ஆண்டுகளின் பின் மீட்பு

அல்பேனியா நாட்டுப் பிரதமர் படோஸ் நானோவின் மெர்சிடஸ் லிமோசின் ஆடம்பரக் கார் 6 ஆண்டுகளுக்கு முன்பு துப்பாக்கி முனையில் திருட்டுப்போனது. கார்த்திருடர்கள்[illegible]ரை இன்னொருவரிடம் விற்று விட்டனர்.பொலிசார், காரின் இப்போதைய உரிமையாளரைக் கைதுசெய்துகாரைமீட்டனர்.

# அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மீது அமெரிக்கர்கள் பலர் அதிருப்தி

### -புஷ்சின் செல்வாக்கிலும் சரிவு

(வோஷிங்டன்)

அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பெல்டு உடனடியாக பதவி விலகவேண்டும் என்று அமெரிக்கர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஈராக் போரை ரம்ஸ்பெல்டு கையாண்ட விதம் சரியில்லை என்று பலரும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சமீபத்தில் வோஷிங்டன் போஸ்ட் சார்பில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் இது தெரியவந்துள்ளது.பெரும்பாலான மக்கள் ரம்ஸ்பெல்ட பதவி விலகவேண்டும் அல்லது அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கில் சதாம்ஹுசைன் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டபோது ரம்ஸ்பெல்டுக்கு இருந்த 71 சதவிகித செல்வாக்கு இப்போது 42 சதவீதமாகக் குறைந்து விட்டது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்படஎம்.பி.க்கள் பலர் ரம்ஸ்பெல்டின் செயற்பாட்டைக் குறைகூறி விமர்சித்துள்ள போதிலும் சானதிபதிஜோர்ஜ் டபிள்யூ புஷ் அவர் நன்றாகச்செயற்படுகிறார் அவர்பாதுகாப்பு அமைச்சராக நீடிக்கவேண்டும் என்று திங்கட் கிழமை கருத்துகூறியுள்ளார். இதே வேளை சனாதிபதி புஷ்சின் செல்வாக்கும் 55 சதவீதத்தில் இருந்து 49 சதவீதமாகக் குறைந்துள்ளது.



சியோலில் கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் புதியவகை ஆடைஅணிந்து நாயுடன் காணப்படும் நபர்

# ஈராக்கில் உள்நாட்டுப் போர் அபாயம்!

### -பிரதமர் அயத் அல்லாவி எச்சரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம் உள்ளதாக இடைக்காலப் பிரதமர் அயத் அல்லாவி எச்சரித்துள்ளார். கிளர்ச்சியாளர்கள் பிரிவினைவாதத்தின் மூலம் உள்நாட்டுப் போரைத் தூண்டிவிட முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த தாக்குதலுக்கு சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் தான் காரணம் என்று குறிப்பிட்ட பிரதமர் இனமோதலை உருவாக்கி ஒற்றுமையைச் சீர்குலைக்கச் சிலர் முயன்று வருவதாகப் புகார் கூறினார். ஈராக்கில் 2005 சனவரி கடைசியில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதைச் சீர்குலைக்கும் முயற்சியில் சிலர் கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு நாங்கள் அஞ்சமாட்டோம் என்றார் அல்லாவி.

சமீபத்தில் நடந்த கார்க் குண்டுவெடிப்பில் 67 பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இதனிடையே ஈராக்கின் வடக்குப் பகுதியில் கிர்குக் நகர் அருகேஉள்ளஎண்ணெய்க் குழாய் திங்கட்கிழமை இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. பாக்தாத் துக்கு வடகிழக்கே 240 கி.மீ வி தொலையில் ஹவிஜா என்ற இடத்தில் செவ்வாய்க்கிழமை கார்க்குண்டு வெடித்ததில் 5 அமெரிக்க வீரர்கள் காயமடைந் தனர். இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ரொக்கெட் தயாரிப்பை மேம்படுத்த இஸ்ரேலுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

### -மேலும் விரிவாக்க இந்தியா திட்டம்

(ரெல்சுவிவ்)

ரொக்கெட் தயாரிப்பை மேம்படுத்த இஸ்ரேல் இராணுவத் தொழிற்சாலையுடன் இந்தியா புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் இராணுவ தொழிற்சாலை தலைவர் அர்ரி மிஸ்ராச்சி நிருபர்களிடம் கூறியதாவது:

ரஷ்ய தயாரிப்பில் உருவான ரொக்கொட் தொழில் நுட்பத்தை மேம்படுத்த இந்தியாஇஸ்ரேல் இராணுவத் தொழிற்சாலையுடன் புதிய ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தம் முதலில் 150 இலிருந்து 200 கோடி அளவிற்கு இருக்கும்.தேவைப் படும் பட்சத்தில் பின்பு விரிவுபடுத்தப்படும்.

இந்த ஒப்பந்தம் சமீபத்தில் இரு நாட்டு இராணுவ உயர் அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் இந்திய ரொக்கெட்களில் புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்படும்.

இவ்வாறு இஸ்ரேல் இராணுவ தொழிற்சாலைத் தலைவர் மிஷ்ராச்சி நிருபர்களிடம் கூறினார்.

## 7,500 ஆண்டுகளுக்கு முன்னான மனித எலும்புக் கூடு கண்டுபிடிப்பு

7 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் எலும்புக் கூடு ஒன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் கண்டு எடுக்கப்பட்டது.

தலைநகர் அபுதாபியில் இருந்து 100 கி.மீ.தொலைவில் உள்ள மார்வா தீவில் இது புதைக்கப்பட்டு இருந்தது. அந்த மனிதன் இறந்த போது 20முதல்40 வயதுக்குள் இருக்கும்.

இந்தத் தீவில் அகழ்வாராய்ச்சிக்காக பல ஆண்டுகளாக நிலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. அப்போது கட்டடங்களின் இடிந்த பகுதி, பாத்திரங்களின் உடைந்த பகுதி ஆகியவையும் கண்டு எடுக்கப்பட்டன.

# திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும் ஈராக்கில் ரொனிபிளேயர் அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும் என பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட ரொனிபிளேயர் அந்நாட்டின் பிரதமர் உட்படப் பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார். இச் சந்திப்பினையடுத்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்.



பாஸ்ராவில் பிரிட்டிஸ் பிரதமர்

ஈராக்கில் சனநாயகத்திற்கும் பயங்கரவாதத்திற்குமிடையில் போர் நடைபெறுவதாகக் கூறினார். நாள்தோறும் இங்குள்ள மக்கள் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடி வருவதாகவும் விரைவில் சனநாயக ரீதியில் தேர்தல் நடைபெற்றுப் புதிய அரசு உருவாகும் என்றும் ரொனிபிளேயர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# ஐநூறு குடும்பங்களுக்கு த.பு.கழகம் நிவாரணம்

(அம்பாறை)

**வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 150,000ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை நிவாரணமாக வழங்கியுள்ளனர்.**

தொடர்ந்து பெய்த கடும் மழையினாலும், வெள்ளப் பெருக்கினாலும் தமது குடியிருப்புக்களை விட்டு இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்ந்து வரும் நாவற்காடு, தாண்டியடி, விநாயகபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பல நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் மேற்படி மூன்று கிராமங்களைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு 150,000 ரூபா பெறுமதியான உலர் உணவுகளை வழங்கியுள்ளனர். இதில் நாவற்காடு கிராமத்தில் 198 குடும்பங்களுக்கும், தாண்டியடியில் 252 குடும்பங்களுக்கும், விநாயகபுரத்தில் 50 குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு 300 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளது.



பூநகரி நாச்சிக்குடாப் பகுதியில் மழைநீரை வளி கட்டிச் சேகரித்துக் குடிநீருக்காகப் பயன்படுத்தும் பொருட்டு கையாளப்படும் விதிமுறையொன்றைப் படத்தில் காண்கிறீர்கள்.
(படப்பிடிப்பு:~க.கணேஸ்)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க மன்னார் கல்வி அதிகாரிகள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறு மன்னார் மடுவலயக் கல்விப்பணிப்பாளர்கள் வன்னி மாவட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசர மனு ஒன்றை அனுப்பியுள்ளனர்.

மிகவும் பின்தங்கிய பிரதேசம் முசலி, நானாட்டான் மாந்தை மேற்குப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவ மாணவிகளிடம் நல்ல திறன் இருந்தும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கல்வித்தரத்தை உயர்த்த முடியாதுள்ளது. சுமார் 200 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். எனவே இவ்விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள், மதத்தலைவர்கள் அனைவரும் கவனம் எடுத்து பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது. (18)

## -வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட-

# மட்டக்களப்பு மக்களுக்கு சக்தி ஊடகம் நிவாரணம்

(மட்டக்களப்பு)

சக்தி ஊடகத்தினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருள் விநியோகம் நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்றுள்ளது. கொழும்பில் கடந்த சில நாட்களாக சேகரிக்கப்பட்ட இந்த நிவாரணப்பொருட்கள் பார ஊர்திகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

இப்பொருட்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது.

இம்மாவட்டங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வீடுகளை விட்டு வெளியேறிப் பொது இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளன. இவர்களுக்கு இதுவரை அரசு எந்தவித உதவிகளையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பில் சிறப்புற நடைபெற்ற சமகால அரசியல் கருத்துப்பரிமாறல்

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சமகால அரசியல்கருத்துப் பரிமாறல் நிகழ்வு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிர மணிய வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 10.15 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்றது .

அரங்கம் நிறைந்த பல்துறை பிரமுகர்கள், புத்திஜீவிகள், போராளிகள், மதகுருமார் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

தலைமை உரையைத் தொடர்ந்து சமகால அரசியல் ஆய்வரங்கம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம், அதிபர்களான செல்வநாயகம், ரவிந்திரராசா, தேசிய எழுச்சிப் பேரவை ஊடக பேச்சாளர் வேதவனம் ஆகியோரால் நடத்தப்பட்டது. "பலத்தைப் பாதுகாப்போம்" என்னும் தலைப்பில் இவ் ஆய்வரங்கம் நடைபெற்றது. இதில் "போர்க்குணம் உறங்கக் கூடாது" "எண்ணங்கள் உறங்கக் கூடாது", "எதிரி விழிப்பாக உள்ளான், நாமும் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்".சமாதானக்காலத்தில் தெற்கில் தோன்றிய இனவாத அரசியல் தோற்றச் சூழல்- எமது பலத்தினால் தோன்றியுள்ள அரசியல் விளைவு-பலம் இருக்குமிடத்தில் சர்வதேச பார்வைப்புள்ளியின் தன்மை- போன்ற தலைப்புக்களில் ஆய்வரங்கம் நடத்தப்பட்டது. ஆய்வரங்கத்தை அடுத்து சிறப்பு சமகால அரசியல் கருத்து ரையை நவம் அறிவுக்கூட பொறுப் பாளர் கலைக்கோன் நிகழ்த்த இறுதியாக பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் கருத்துரைகளை வழங்கினார். (19)

## தமிழிசைஅரங்கு

முல்லை. மாவட்ட புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியின் மார்கழி மாத தமிழிசை அரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நுண்கலைக் கல்லூரிகளின் பொறுப்பாளர் க.தணிகைமாறன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை கலைஞர் பிலிற்யோன்கபாஸ் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை அரசியல் துறை சமாதானச் செயலகப் போராளி தர்சன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மாவீரர்களிற்கான ஈகச்சுடரினை நவம்அறிவுக் கூடப்பணிப்பாளர், கலைக்கோன் அவர்கள் ஏற்றிவைத்தார். அதன் பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

## -வட்டக்கச்சிப் பிரதேச-

## தேசிய எழுச்சிப் பேரவையின் வேலைத்திட்டம் குறித்த கலந்துரையாடல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி தேசிய எழுச்சிப்பேரவையினரின் 2005ஆம் ஆண்டின் வேலைத்திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கானது கடந்த ஞாயிறு மாலை 4.30 மணியளவில் தேசிய எழுச்சிப்பேரவை செயலர் பொன்னுத்துரை தலைமையில் வட்டக்கச்சி அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றது. வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் உள்ள ஆறு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள தேசிய எழுச்சிப்பேரவையினரின் செயலர்கள்,உப செயலர்கள், பொருளாளர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 2005ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வலய தேசிய எழுச்சிப் பேரவையில் கலைநிகழ்வுகள், கருத்தரங்குகள் நடத்துவதெனவும், முடிவு செய்யப்பட்டது. நிகழ்வில் வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் கலந்து சிறப்புரை ஆற்றினார். (12)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி முடிவுகள்

(அலுவலக செய்தியாளர்)

தேசிய வாசிப்பு மாதத்தை (ஒக்ரோபர் 2004) முன்னிட்டு கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலை க.பொ.த.(உ/த), க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பெற்ற கட்டுரைப்போட்டியில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவ, மாணவிகளது மற்றும் ஆறுதல், ஊக்குவிப்புப் பரிசில்களுக்கு தெரிவு செய்யப்பெற்ற மாணவ, மாணவிகளதும் பெயர்களும், பாடசாலைகளின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவர்களின் விபரம் வருமாறு:

*கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலை*

1ஆம் இடம். செல்வன் சிவராசா மயூரன் - கிளி/இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்.செல்வி செ.மாநிதி - கிளிபுனிததிரேசா பெண்கள் கல்லூரி, 3ஆம் இடம் செல்வி. த.தாரணி -கிளி/உருத்திரபுரம் ம.வி.

*ஆறுதல்பரிசு பெறுவோர்.*

செல்வி.ச.உஷாயினி-கிளி. இந்துக்கல்லூரி, செல்வி. ம. சசிபாரதி- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, செல்வன். பி.ஜெயதீபகன் - கிளி/ உருத்திரபுரம் ம.வி.

*கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பாடசாலை*

1ஆம் இடம். செல்வன். வி.விஜயதர்சன் -கிளி/ முருகானந்தா ம.வி.,1ஆம் இடம். செல்வி.தி.கோவதனி -கிளி/புனித அந்தோனியார். றோ.க.வி., 3ஆம் இடம். செல்வி. க.ஜனனி- கிளி.முருகானந்தா ம.வி.

*ஆறுதல் பரிசு பெறுவோர்.*

செல்வி. வ.வினோஜா- கிளி. முருகானந்தா ம.வி, செல்வன். க.பத்மராசா - கிளி.முருகானந்தா ம.வி.

*ஊக்குவிப்புப் பரிசு பெறுவோர்*

செல்வி. செ.பிரவீணா-கிளி/ பரந்தன் இந்து ம.வி, செல்வி. நா.தனுசா-கிளி/பரந்தன் இந்து ம.வி.

பரிசளிப்பு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தெரிவித்துள்ளார்.

(சோ)

## அதிபர்களுக்கு செயலமர்வு

துறைசார் அணுகுமுறை ஊடாக பாடசாலை மட்ட திட்டங்களைத் தயாரிப்பதற்கான கரைச்சிக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் கிளிநொச்சி கல்விவள நிலையத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. இத்திட்டம் 2006-2010 வரையான பாடசாலைகளுக்கான பௌதீக வளங்கள், ஆசிரிய வளங்கள், கல்வித்தரவிருத்தி போன்ற சகல திட்டங்களும் உள்ளடக்கப்பட இருக்கின்ற இத்திட்டத்தினுடைய அடிப்படையிலேயே எதிர்காலத்தில் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன.அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவப் பிரதிநிதிகள், ஆசிய பாடசாலை மட்ட முகாமைத்துவக் குழுவினரால் இத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. இத்திட்டச் செயற்பாடுகளுக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய நிதி நிறுவனங்களிலிருந்து நிதியுதவி கிடைக்க இருக்கிறது. (14)

## க.பொ.த உயர்தர மாணவருக்கான கருத்தரங்கு

க.பொ.த (உயர்தர) விஞ்ஞான வகுப்புக்கான கருத்தரங்கும் தொழில் சார்கற்கை நெறி வழிகாட்டலும் தொடர்பான கருத்தரங்கினை முல்லை வலயக்கல்விப்பணிமனை மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களின் உதவியோடு வன்னிப்பிரதேச க.பொ.த.(உ/த) விஞ்ஞானபீட மாணவர்களுக்கு நடாத்தவுள்ளது. இக்கருத்தரங்கில் இணைந்த கணிதம், பௌதீகவியல் பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயல் அமர்வு தொழில் ரீதியாக மாணவர்கள் தமது கல்வித்துறை களை தெரிவதற்கான வழிகாட்டலும் இடம் பெறவுள்ளது. இக்கருத் தரங்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நாளை பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறும். மேற்படி கருத்தரங்கில் வன்னிப்பிரதேச க.பொ.த (உ/த) விஞ்ஞான பிரிவு மாணவர்கள் கலந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## 5,744 பேர் சிகிச்சை

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த நவம்பர் மாதம் 5,744 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத் தியசாலையின் கடந்தமாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில், வெளிநோயாளர் பிரிவில் 3766 பேரும், சாதாரண காய்ச்சலினால் 940 பேரும், சிரங்கு நோயினால் 394 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 258 பேரும், குருதிச் சோகையினால் 198 பேரும், வயிற்றோட்டத்தினால் 79பேரும், சிறுசத்திரசிகிச்சைக்காக 42 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலை மகப்பேற்று மனையில் கடந்த மாதம் மகப்பேற்றுக்காக 41 கர்ப்பிணித்தாய்மார்கள் அனுமதிக்கப் பட்டு அதில் 26 சிசுப் பிறப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

மேற்படி வைத்தியசாலை யின் வைத்திய அதிகாரி விடுப்பில் செல்லும் போது பதில் வைத்திய அதிகாரி இன்மையினாலேயே கடந்த மாத நோயாளர் தொகை குறைந்துள்ளமையும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் நோயாளர் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஆ)

# கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பு அழைப்பு

(தென்மராட்சி)

தமிழீழ மாணவர் அமைப்பினரால் யாழ். குடா நாட்டில் போரினாலும், வறுமையினாலும் இன்னும் பிற காரணங்களாலும்கல்வியைத் தொடர முடியாத உயர்தர வகுப்புப் பயிலும் மாணவர்களும், இன்னும் கல்வியை இடையில் நிறுத்தியுள்ள மாண வர்களும் தமது கல்விச் செயற்பாடுகளை தடை யின்றி முன்னெடுக்க ஏதுவாக தமிழீழ மாாணவர் அமைப்பின் சார்பில் பல்வேறு திட்டங்கள் வகுக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பொருட்டு மாணவர்களின் வருங்கால வாழ்வையும், ஒளிமயமான கல்வியையும் தடை யின்றி வழங்கவும் அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தாம் வழங்க முன்வந்திருப்பதாக தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் தெரி வித்துள்ளார்.

இது சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற விரும்பும் மாணவர்கள் பூங்கனிச்சோலைக்கு அரு கில் உள்ள யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பின் தலைமை அலுவலகத்தில் உடன் தொடர்பு கொள் ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (28)



நாவற்குழி அரும்புகள் முன்பள்ளியின் அவலம் நிறைந்த தோற்றம்- முன்பள்ளி அமைந்துள்ள கூரை இல்லாத வீட்டில் முன்பள்ளி மாணவர்களுடன் 300 வீட்டுத் திட்ட தலைவர். (படம்:ஆன்சலின்)

# தென்மராட்சியில் படையினர் கெடுபிடி! விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் படையினரால் அனுமதிக் கப்பட்ட விவசாய நிலப்பரப்புக்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப் போர் படையினரது கெடுபிடிநடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.**

தென்மராட்சி தெற்கு இரா ணுவ அதிஉயர் பாதுகாப்பு வல யத்தினுள் காணப்படும் மறவன் புலோ, தனங்கிளப்பு, கைதடி போன்ற பிரதேசங்களில் உள்ள விளைநிலங்களில் ஒரு பகுதியை அண்மையில் படையினர் விவசா யிகளின் பயிர்ச்செய்கை நடவடிக் கைக்காக அனுமதித்தனர்.

இதற்கமைவாக இவ்வாண்டு தொடக்கம் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுவரும் நிலையில் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் மேற்படி பகுதி விவசாய நிலங்கள் காணப்படுவதைக் காரணம் காட்டி இங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடு வோருக்கு பாஸ் நடைமுறையை அமுல் படுத்தியுள்ளனர்.

அத்துடன் அப்பகுதி விவசாய நிலங்களுக்கு கொண்டு செல்லும் இடுபொருட்கள் (உரம்) மற்றும் மருந்துப்பொருட்களைப் படையி னா கடுமையாக சோதனை செய்த பின்பே அவற்றை கொண்டு செல்ல அனுமதிக்கின்றனர்.

இதனால் அப்பகுதி விவசாயி கள் தமது இயல்பான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது சிரமப்பட்டு வருகின்றனர். (33)

# மண்கும்பான் பகுதி காணிகளில் கடற்படை பனைமரங்கள் தறிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தின் மண்கும்பான் பகுதிகளில் உள்ள தனியார் காணிகளில் இருந்து பனைமரங் களை தறித்து எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளில் சிறிலங்கா கடற்படையினர் ஈடுபட்டு வருகின் றனர்.

மேற்படி பகுதியில் உள்ள ஆள் நடமாட்டமற்ற தனியார் காணிகளுள் நுழையும் படை யினர் அங்கு நிற்கும் பனைமரங் களைத் தறித்து குற்றிகளாக்கி அவற்றை உழவுயந்திரங்கள் மூலம் ஏற்றிச்சென்று தமது இராணுவ காவலரண்களைப் பலப் படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாக மக்கள் குற் றம் சாட்டுகின்றனர். (33)

### கிளாலியில் பயிற்சி

(தென்மராட்சி)

கிளாலி கடலேரியை ஒட்டிய பகுதிகளில் சிறிலங்காப் படை யினர் மோட்டார் மற்றும் ஆட்லறிக் குண்டுகளை வெடிக்க வைத்தும் பராலைட் வெளிச்சத்தில் படையி னர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருகின்றனர். விடத்தற்பளை, கெற்பெலி, கேமஸ் நகர், தரவைப் போன்ற பகுதியைச் சேர்ந்த மக்கள் இக் குண்டுச் சத்தங்களைக் கேட்ப தாகவும், தரவை பகுதிகளில் எறி கணைகள் சிதறல்கள் பல தோட் டக்காணிகளில் விழுந்து சிதறி இருப்பதாகவும் தெரியவருகிறது. (28)

# மின்வழங்க நிதி ஒதுக்கியும் விநியோகத்தில் தாமதம் ஏன்?

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊர் காவற்துறையில் மின்சாரம் வழங்கப்படாத பிர தேசங்களுக்கான மின் இணைப் புகளை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும் இலங்கை மின்சார சபையினரால் அதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை. ஊர் காவற்துறைப்பகுதியில் உள்ள பல இடங்களுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்படாததி னால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளனர்.

எனினும் இது குறித்து மின் சாரசபையினர் தொடர்ந்தும் அலட் சியப்போக்கைக்காட்டி வருவதை யிட்டு அப்பகுதி மக்களால் விச னம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ்.இல் கோதுமை மாவிற்கான தட்டுப்பாட்டினால் உருவாகியுள்ள நெருக்கடி நாளுக்குநாள் அதிகரிப்பு!

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்தினில் கோதுமை மாவிற்கு ஏற்பட்டுள்ள பெரும் கிராக்கியினால் நிலைமை தொடர்ந்தும் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. போதிய கோதுமை மா கையிருப் பில் இன்மையால் பல வெதுப் பகங்கள் (பேக்கரிகள்) பாண் உற்பத்தியினை முற்றாக இடை நிறுத்தியுள்ளன. சில உற்பத்தி யினை மட்டுப்படுத்தியுள்ளன.

இதேவேளை பல உணவ கங்களிலும்இதேபோன்று கோதுமை மாவிலான உணவுப்பொருட்களது உற்பத்தியினை இடைநிறுத் தியுள்ளன. சில உணவுச்சாலைக ளில் அதிகரித்த விலையில் இவ் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் பொதுமக்கள் சந்தைக ளில் கோதுமை மாவினைப் பெற்றுக்கொள்ள முடியாததோர் நிலையும் நீடிக்கின்றது.

அரசிற்கும்-பிறிமா நிறு வனத்திற்குமிடையேயான இழு பறிகள் ஒரு புறத்தே தொடர, மறுபுறத்தே வடபகுதிக்கான தமது கோதுமை மாவின் ஒதுக் கீடு முடிவடைந்து விட்டதாகவும் பிறிமா நிறுவனம் அறிவித்துள் ளது. ஆயினும் வடபகுதிப் பாவ னைக்கென வடபகுதிமுகவர் ஒரு வருடாக பிறிமா நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கோதுமை மா தென்னிலங்கைக்கு ஏற்கனவே திருப்பி விடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட வர்த்தக சங்க வட் டாரங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. அவ்வாறு தென்னிலங்கைக்கு திருப்பப்பட்ட கோதுமை மா கூடிய விலையில் விற்கப்பட்டு இலாபம் ஈட்டப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக் கின்றன.

இதனிடையே அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் கோதுமை மாவிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினை நீக்குவது தொடர்பாக யாழ்.செயலகத்தில் கூட்டமொன்று கடந்த சனிக் கிழமை இடம் பெற்றுள்ளது. அம் மாநாட்டில் கோதுமை மாவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியினை நீக்க உடனடியாக கோதுமை மாவை வழங்க நடவடிக்கை எடுத்து உதவுமாறு அரச அதிபர் அரசிடம் உடனடி கோரிக்கை யொன்றினை அப்போது விடுத்து மிருந்தார்.

எனினும் கோதுமை மா இதுவரை குடா நாட்டினை வந்து சேர்ந் திராத நிலையில் தற்போது கறுப்புச் சந்தையில் இரட்டித்த விலையினில் கோதுமைமா விற்பனை செய்யப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. 27)

# அரசின் மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கும் சட்டத்தரணிகளுக்கு எதிராக யாழ்.இல் ஆர்ப்பாட்டம்

## அன்னையர் முன்னணி ஏற்பாடு

(தென்மராட்சி)

காணாமல் போனோர் விடயத் தில் அரசுக்கு ஆதரவாக செயற் படும் சட்டத்தரணிகளின் செய லைக் கண்டித்து சட்டத்தரணிகள் அலுவலகம் முன்னால் மறியலில் ஈடுபட அன்னையர் முன்னணி முடிவு.

1996-97 காலப்பகுதியில் சிறி லங்காப் படைகளால் கைது செய் யப்பட்டு காணாமல் போன 600 இற்கும் மேற்பட்டவர்கள், சம்பந் தமான வழக்குகளில் சட்டத்தர ணிகள் அரச படைகளுக்கு ஆதர வாக செயற்பட்டிருப்பதாகவும், செயற் பட்டு வருவதாகவும் குற்றம் சாட் டியே வரும் வெள்ளிக்கிழமை யாழ். சட்டத்தரணிகள் அலுவல கத்திற்கு முன்னால் கண்டன மறியல் போராட்டம் ஒன்றை நடத்த அன்னையர் முன்னணி முடிவு செய்திருப்பதாக தெரிய வருகிறது.

இதற்கான விரிவான ஏற் பாடுகள் அனைத்தும் நடைபெற்று வருவதாக இதன் அமைப்பா ளர்கள் தெரிவித்துள்ளனர். (28)



(நல்லூர்)

மக்கள் வங்கியின் மல்லாகம் உபகிளையினால் குட்டியபுலம் பகுதி வறிய மக்களுக்கு விவசாயக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பயனாளி ஒருவர் உரையாற்றுவதையும் அருகில் மக்கள் வங்கியின் பிராந்திய உதவி முகாமையாளர் ஆனந்தராசா, காங்கேசன்துறை இணை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (41)

# கொடிகாமத்தில் ஒரே இரவில் மூன்று கடைகளில் கொள்ளை

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் கடந்த திங் கட்கிழமை இரவு அடுத்தடுத்து மூன்று கடைகளில் கொள்ளை யிடப்பட்டுள்ளன. ரூ.3இலட்சம் மதிப்புடைய பொருட்கள் களவாடப் பட்டுள்ளன.

கொடிகாமம் பருத்தித்துறை சாலையில் பேருந்து நிலையத் திற்கு அருகில் உள்ள மூன்று கடைகளில் ஒரே இரவில் கடை யின் ஓடுகளைப் பிரித்து இத் துணிகரக் கொள்ளை இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகி றது.

கண்ணன் களஞ்சியம் மற்றும் அருகில் உள்ள கிருஷ்ணாகூல் பார், சாந்தன் உணவகம் ஆகிய மூன்று கடைகளில் இருந்து ரூ.80 ஆயிரம் ரூபாய் பணமும் மற்றும் 60 பண்டல் சிகரெட் கிற்காட், மோதிரம் மற்றும் பலசரக்கு பொருட்களையும் கொள்ளை யர்கள் கொள்ளையடித்துச் சென் றிருப்பதாக தெரிய வருகிறது.

கொடிகாமம் நகரில் ஒரே இர வில் மூன்று கடைகளில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத்தால் வர்த்தகர்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இது குறித்து கொடிகாமம் பொலிசார் தீவிர விசாரணைகளை நடத்தி வரு வதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

யானை ஒன்று கீழே விழுந்து விட்டால் அதனை யாராலும் தூக்கி நிறுத்த முடியாது அது தானாக எழும்பினால் மட்டுமே ஒரு ஸ்திரநிலைக்கு வந்துவிட்டதாகக் கருத முடியும்.

அது போலவே ஐக்கிய தேசியக் கட்சியும் விழுந்து கிடக்கின்றது. எனினும் தற்போது உயர் நீதிமன்றம் எஸ்.பி திஸா நாயக்கவுக்கு வழங்கிய தீர்ப்பையடுத்து அது யானையைப் போன்று எழுந்து தலையை நிமிர்த்த ஆரம்பித்துள்ளது. 1994 ஆம் ஆண்டு முதல் அடுத்தடுத்த தேர்தல்களில் அக்கட்சி தோல்வியடைந்து வீழ்ந்து கிடந்து 2001ஆம் ஆண்டு தலைதூக்கியதும் ஒரு நீதிமன்ற தீர்ப்பின் மூலமே. அதாவது ஐ.தே.கட்சி எதிர்க்கட்சியாக இருந்த வேளை ஜே.வி.பியுடன் இணைந்து பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்த போது உயர் நீதிமன்றம் தடை விதித்து தீர்ப்பு வழங்கிய பின்னராகும்.

அந்தத் தீர்ப்பு வழங்கப்படும் வரை ஐ.தே.கட்சி படுவீழ்ச்சி கண்டு இருந்தது. கட்சிக்குள்ளேயே பல குளறுபடிகள், மோதல்கள், உட்பூசல்கள் ஏற்பட்டிருந்தன.

விட்டது என இரு ஐ.தே கட்சி உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர்.

ஆனால் சந்திரிகாவின் கூட்டணி அரசு எஸ்.பிக்கு மறியல் சோறு தமக்கு பாற்சோறு என நினைத்தது. ஆயினும் வரலாற்றில் ஒரே சம்பவம் இருமுறை நடவாது என்பது மட்டும் சந்திரிகாவுக்குத் தெரியாது.

அதாவது முன்பு ஒருமுறை 1982ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தனா,ள விஜய குமாரணதுங்கவை நக்சலைட் எனக் குற்றம் சுமத்தி சிறையில் அடைப்பித்தார். அத்துடன் 1982ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதி ஜே.ஆர் தொடர்ந்து பதவி நீடிப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பிலும் வெற்றி பெற்றார். அவர் விஜயகுமாரணதுங்கவை சிறைக்கு அனுப்பாதிருந்திருப்பின் வாக்கெடுப்பில் தோல்வியை சந்தித்திருப்பார். அவருக்கு இந்த ஆலோசனையைக் கூறியதும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களே. சிறிலங்கா சுதந்திரக் கட்சி சுக்கு நூறாகி விட்டது. என்றும் விஜய குமாரணதுங்க மட்டுமே எதிர்த்து நிற்பவர் என்றும் அவருக்கு பெரும் ஆதரவு கிடைக்கும்



என்றும் ஜே.ஆருக்கு ஆலோசனை கூறப்பட்டது. அந்த ஆலோசனைக் கேற்பவே ஜே.ஆரும் அன்று நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

நாம் பாராளுமன்றை ஒத்தி வைக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்துவோம் ஆனால் 50 வீதவாக்குகளைப் பெற வேண்டு

இதன் காரணமாக கூரே ஐ.தே.கட்சிக்கு எதனைச் செய்தாலும், சொன்னாலும், ரணிலுக்கு அது செல்லாக் காசாகியது அதனால் ரணிலை தோல்வியுறச் செய்ய கூரே சந்திரிகாவுக்கு உதவினார்.

அந்த வகையில் எஸ்.பி திஸா நாயக்கவும் தன் பக்கம் திரும்பலாம் என்று அவர் நினைத்தாரோ? நினைத்திருப்பின் அது ஆச்சரியமே. சந்திரிகாவின் பதவிக் கால முடிவு நெருங்க நெருங்க அவர் அரசியலமைப்பை மாற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார். அதன் காரணமாக சில ஐ.தே.கட்சி உறுப்பினர்களை தம் பக்கம் திருப்பவும் சர்வசன வாக்கெடுப்பை நடத்தவும் தேவை ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு நடவடிக்கையாக ரவிகருணாநாயக்கா அப்துல் காதர் போன்ற ஐ.தே.க எம்.பிக்களை கைது செய்து ஏனைய உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தார். சில ஐ.தே கட்சி உறுப்பினர்கள் ஐ.ம சுதந்திர முன்னணிக்குள் வரவிருப்பதாக வதந்தியைக் கிளப்பி சிரேஷ்ட உறுப்பினர்களை சந்தேகத்திற்குள்ளாக்கினார். அதன் மூலம் கட்சியின் சிரேஷ்ட

உறுப்பினர்களிடையே மோதலை உருவாக்கவும் அவர் திட்டமிட்டார். அந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களால் சில ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் முற்றுகைக்குள்ளாகியுள்ளனர். இது அன்று 1982ஆம் ஆண்டு ஜே.ஆர். சர்வசனவாக்கெடுப்பை அறிவித்ததற்கு ஒப்பானதாகும்.

எண்ணலாம். அது மேற் கூறப்பட்ட சந்திரிகாவின் தந்தி ரமாகவும் இருக்கலாம்.

அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் சந்திரிகா உரையாற்றும் போது; ''ரணில் எதிர்க்கட்சி காரியாலயத்தில் இருந்து வேறு அலுவல்களைக் கவனிக்கிறார். திஸாநாயக்க தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்ற கருத்துப்படக் கூறியுள்ளார். ஆனால் ஜீ.எல்.பீரிஸ், மகிந்த விஜய சேகர, ரணில் ஆகியோர் இணைந்து கூட்டு முயற்சியை மேற்கொள்வதும் சந்திரிகாவுக்குப் புரியும்.

ஆயின் ஐ.தே.கட்சி திஸாநாயக்கவை கைவிட்டு விட்டதாக யார் கயிறு திரித்தது? அங்கேயே பிரச்சினை. இது சரியாக வெற்றி நிச்சயம் (ஜயசிக்குறு)நடவடிக்கை போன்றதாகவே இருக்கிறது. “இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் புலிகள் சிதறிவிட்டதாகக் கூறினர். இறுதியில் அனைவரும் ஒன்று கூடி ஜயசிக்குறுவையும் முறியடித்து யாழ்ப் பாணத்தை





# எஸ்.பி.திஸாநாயக்கவை சந்திரிகா கைதுசெய்தது “ஜயசிக்குறு” இராணுவ நடவடிக்கைக்கு ஒப்பானது

கட்சித் தலைவருக்கு எதிராக கிளர்ச்சியை ஏற்படுத்தி கட்சியை சிதறடிக்க அதோ இதோ என்றிருந்தகாலம் பிரதம நீதியரசருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகொண்டு வருவதிலும் அவர்களுக்குள் கருத்து மோதல்கள் ஏற்பட்டன. ஆயினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது என நீதிமன்றம் தடை உத்தரவை வழங்கியதும் கட்சியில் அனைவரும் ஒன்று கூடினர். அதற்கெதிராக முதலில் பாராளுமன்றிலும் பின்னர் வீதிப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். அத்துடன் பொது மக்கள் போராட்டங்களையும் நடத்தினர். இறுதியில் 2001 ஒக்ரோபரில் பொ.ஐ முன்னணியை வென்று ஐ.தே.க ஆட்சிக்கு வந்தது.


அதே போன்று இந்த நீதிமன்ற தீர்ப்பும் பின்னர் 2005 மார்ச் ஏப்ரல் மாதமளவில் இந்த அரசாங்கத்தையும் விழுத்துமா? அதை இப்போது கூற முடியாது. எனினும் எஸ்.பி திஸா நாயக்கவை சிறைக்கு அனுப்ப முன்பு ஐ.தே.கட்சியினர் ஒருவருக்கொருவர் மோதலில் ஈடுபட்டு வந்தமை உண்மை யாகும். ரோஹித போகொல்லாகம ஆளும் கட்சியில் இணைந்தார். மேலும் பலர் இணையப் போவதாகக் கூறப்பட்டது. கட்சித் தலைவருக்கு எதிராகவும், விமர்ச னங்கள் தோன்றின. சிலர் கட்சிக்கு ஆதரவளிக்கவும் மறுப்புத் தெரிவித்தனர். அதன் மூலம் மீண்டும் கட்சி பல பிரிவுகளாக பிளவுபடும் நிலை தோன்றியது.

ஆனால் திடீரென எஸ்.பி திஸாநாயக்கவுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டதும் கட்சியில் அனைவரும் ஒன்று கூடிவிட்டனர். அரசுக்கெதிராக போர்க்கொடி தூக்கி விட்டனர்.

இதனை ஊடகவியலாளர் ஒருவரிடம் இன்றுதான் ஐ.தே.கட்சி எதிர்க்கட்சியிலிருப்பதாக உணர்கின்றேன் என்று கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் திஸாநாயக்க சிறைக்குச் சென்ற பின்னர் இறக்கும் தறுவாயில் கிடந்த கட்சிக்கு பிராணவாயு (ஒட்சிசன்) கிடைத்து

மாயின் விஜயகுமாரணதுங்கவை உள்ளே தள்ள வேண்டும் அதன் பின்னர் கட்சியில் யாரும் வாய் திறக்க மாட்டார்கள். வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதும் விஜயகுமாரணதுங்கவை வெளியில் எடுத்து விடலாம். அவர் வெளியில் வந்ததும் சிறிமாவையும், அநுராவையும் தன்னை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என முரண்பட்டுக்கொண்டு அவரும் கட்சியை விட்டு விலகலாம் என்பதே அன்று அவர் வகுத்த வியூகமாகும். இந்தத் திட்டமும் நிறைவேறியது. அதன்படி அவர் சிறைக்குச் சென்றதும் விஜயகுமாரணதுங்கவின் கட்சியை சிறிமாவும் அநுராவும் கைப்பற்றினர். அதன் மூலம் அநுராவினதும், சிறிமாவினதும் கட்சியும் நாட்டின் சனநாயகமும் பாதுகாக்கப்பட்டு விட்டது என ஐ.தே.கட்சி தெரிவித்த போது சிறிமாவோ மௌனமாகினார். இதனால் கட்சியின் ஏனையோரும் பதட்டம் அடைந் தனர். ஐ.தே.கட்சியை தோல்வி காணச் செய்ய எடுத்த முடிவும் தடம் மாறியது.

ஜே.ஆர் தீட்டிய திட்டத்தின் படியே விஜயகுமாரணதுங்க சிறையிலிருந்து மீண்டதும் அநுராவுடனும், சிறிமாவுடனும் முரண்பட்டு பிரிந்து சென்று தனிக் கட்சி ஒன்றை ஆரம்பித்தார். அதன் விளைவாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி 17 வருடங்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருக்க நேரிட்டது. இந்த வரலாற்றை சந்திரிகாவும் அறியாமலில்லை. கட்சிக்காரர்களின் பேச்சை நம்பி செயற்பட்டு கட்சித் தலைவர் ஒருவர் சிறைக்குச் சென்றால் கட்சி வீழ்ச்சியுற்று தலைமைக்காக தமக்குள் மோதிக் கொள்வதும் கட்சி தான் எடுக்கும் நடவடிக்கைகளினால் விசனமடைவதும் சந்திரிகாவுக்குத் தெரியும். காரணம் அவர் விஜயகுமாரணதுங்கவின் துணைவி என்றதால். ஜே.ஆர் விஜயகுமாரணதுங்க தொடர்பாக எடுத்த நடவடிக்கையைப் போன்று சந்திரிகாவும் சிறிசேனகூரே மீது நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள நினைத்தார். கூரே அரசை கவிழ்க்க சதி செய்ததாக குற்றம் சுமத்தி அவரை சந்திரிகா வீட்டுக் காவலில் வைத்தார்.




“அன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் பலத்தை அதிகரித்து கொள்ள அவகாசம் கொடுத்தேன். பாராளுமன்றைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் நடத்தினால் 196 ஆசனங்களில் 120 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெறுவேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சி 98 ஆசனங்களை மட்டுமே பெறும்” என்று ஜயவர்தனா கூறினார்.

ஆயினும் சந்திரிகா இன்று நினைப்பது எஸ்.பி.சிறைக்குச் சென்றால் ரணில் மௌனமாகி விடுவார், தமது கட்சியிலிருந்து ரணிலின் பக்கம் சென்றவர்கள் கலவரப்படுவர், ஆதரவாளர்கள், விசனமடைவர் ஐ.தே.கட்சி இயந்திரம் செயலிழந்துவிடும், ஊழல் குற்றம் சாட்டப்பட்டோர் தம்முடன் இணைந்து விடுவர், அப்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுவிடலாம். ஒருபுறம் ரணிலினதும் எஸ்.பி.யினதும் ஆதரவாளர் முட்டிக்கொள்வர், அத்துடன் கட்சியும் சீரழிந்துவிடும், எஸ்.பி.திஸாநாயக்க சிறைக்கு சென்றதும் ஏன் ரணில் வாய் பேசாதிருக்கிறார். என விமல்வீரவன்சமங்கள சமரவீர போன்றோர்

நெருங்கினர்” என எஸ்.பி.திஸாநாயக்க சிறைத்தண்டனை பெற்றதைப்பார்த்து சிலர் கூறினர்.

உண்மையில் 2004 ஆம் ஆண்டு

**உப்புள் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**தமிழில் வடிவேல்**

தேர்தலுக்குப்பின் ஐ.தே.கட்சி படு பாதாளத்திலேயே விழுந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு பல போராட்டங்களைச் சந்தித்து கண்ணீர்ப் புகைப்பிரயோகத்துக்குட்பட்டு சிறைவாசம் அனுபவித்து கைப்பற்றிய அரசை சந்திரிகா ஒரே இரவில் நாசமாக்கி ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மீது வீண் பழி சுமத்தி மீண்டும் அரசாங்கத்தைக் கைப்பற்றினார். ஒருவரை தொடர்ந்து தாக்குவதால் அவர் எழும்ப முடியாமல் போகலாம். கடைசித் தாக்குதலில் உயிர் போகலாம் ஆனால் அதே தாக்குதல் அவரை வீறு கொண்டு எழவும் செய்யலாம் அவ்வாறு எழும்பினால் யாருக்கு என்ன நடக்கும் என்பதைக் கூற முடியாது.

# கொழும்பில் சிங்களக்கடும் போக்காளரின் மாநாட்டில்

# எங்கள் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை

## சர்.மன்னிப்புச் சபையின் நோர்வேக்கிளை அறிவிப்பு

(கொழும்பு)

**நோர்வேயின் அனுசரணை முயற்சிக்கும் விடுதலைப்புலிகளுக் கும் எதிராக கொழும்பில் பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் சிங்களக்கடும் போக்காளர்கள் நடத் திய மாநாட்டில் தங்கள் சார்பில் எவருமே கலந்து கொள்ள வில் லையென சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வேக் கிளை தெரி வித்துள்ளது.**

"இலங்கையில் சமாதானத்தையும் சனநாயகத்தையும் நோக்கி" என்ற இந்த மாநாட்டில் சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வேப் பிரதிநிதி எனக்கூறி அங்கு பிரசன்னமாகியிருந்த போல்க் ரோவிக் என்பவர் தெரிவித்த கருத்துக்களும் அவர் ஒப்படைப்பதாகக் கூறி அங்கு காண்பிக்கப்பட்ட ஒளிப் பதிவுக் காட்சியும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

புலிகளுக்கு நோர்வே தரப்பினர் யுத்தடாங்கி ஒன்றில் பயிற்சிகளை வழங்குவது போல் அந்தக் காட்சிகள் அமைந்திருந்ததுடன் புலிகளுக்கும் முன்னாள் நோர்வே தூதுவருக்கும் -புலிகளுக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு அதனைப்பதிவு செய்து அதனை வெளியிடுவதாகவும் கூறி அங்கு ஒலிப்பதி வொன்று ஒலிபரப்பப்பட்டது. சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வே பிரதிநிதி எனக் கூறப்படும் ரோவிக் என்பவரே இவற்றை அங்கு வெளிப்படுத்தியிருந்தார். எனினும் இவர் தங்களின் நோர்வே பிரதி நிதியல்ல என்றும் இவர் பற்றி தங்களுக்கு எதுவுமே தெரியாதென்றும் மன்னிப்புச் சபையின் நோர்வே தகவல் பிரிவுப்பொறுப்பாளர் ஜோண்ப எகினஸ் தெரிவித்துள்ளார்.

# கடத்தல்

இன்ரகூலர் வாகனம் ஒன்று அத்துருகிரிய பகுதியில் வைத்து இரு ஆயுத பாணிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இதை ஓட்டி வந்த வர்த்தகரை மிரட்டி இறக்கி விட்டுவாகனம் கடத்தப்பட்டுள்ளது.

# வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணி முதல் 6.00 மணி வரை நடைபெற்றது.

வவுனியா அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன், கிஷோர், வினோநோகராதலிங்கம், தமிழீழக் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், வவுனியா மாவட்ட பொறுப்பாளர் ஞானம், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஒஸ்வேல்ட், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வவுனியா மாவட்ட தலைவரும் தேசியக் கல்வியற் கல்லூரியின் பீடாதிபதியுமாகிய க .பேர்ணாட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் வவுனியா மாவட்ட பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகவும் , அவற்றின் தீர்வுகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (10)

# மக்களின் புகார் குறித்து சனாதிபதி கவனத்தில் கொள்ளவில்லை

## பிரதி அமைச்சர் குற்றச்சாட்டு

புத்தளம் பகுதியில் யானை தாக்கி இதுவரை நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் சனாதிபதியோ, சுற்றாடல் வளத்துறை அமைச்சரோ கவனத்தில் கொள்வதாக இல்லை என பிரதி அமைச்சர் டீ.எம்.திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் 160 யானைகள் இனம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதுவரை 500 வீடுகள் இவற்றால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இவற்றைக் கட்டுப்படுத்த மின்சார வேலிகள் அமைக்கப்பட வேண்டும் என பலமுறை அரசிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழரின் யுத்தகால துன்பதுயரங்களை சிங்களத்தில் மொழிபெயர்க்க முயற்சி

## - இல. ஆ.சங்கம் நடவடிக்கை

(திருகோணமலை)

கல்வி ஊழியர்களுக்கான நிலையம் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களின் யுத்தகாலத் துன்ப துயரங்களைத் திரட்டி அவற்றை சிங் களத்தில் மொழிபெயர்த்து நூல் வடிவில் நாட்டின் தென் பகுதி சிங் கள மக்கள் மத்தியில் விநியோ கிக்க இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அமைப்பாளர் பேர்டிரண வீரகே தெரிவித்தார்.

யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணியின் ஓர் அங்கமாகச் செயற்படும் கல்வி ஊழியர்களுக்கான நிலையத்தினால் சனவரி 22இல் அநுராதபுரத்தில் பிராந்திய ரீதியில் பெப்ரவரி 26 கொழும்பில் தேசிய மட்டத்திலும் நடத்தப்படவிருக்கும் யுத்தத்திற்கு எதிரானதும், சமாதானத்தை வலியுறுத்தியும் நடத்தப் படவிருக்கும் மாநாடுகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காக வார இறுதியில் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், கிண்ணியா, மூதூர், திருகோணமலை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் பேர்டிரணவீரகே பங்குபற்றியிருந்தார்.

"வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள் தங்களின் யுத்தகால துன்ப துயரங்களை தமிழ் மொழியில் எழுதி எமது அமைப்பாளர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளோம். அவற்றை நாம் சிங்களத்தில் மொழிபெயர்த்து நூல்வடிவில் கொண்டுவருவதற்குத் தீர்மானித்துள்ளோம். தென்பகுதி சிங்கள மக்கள் மத்தியில் இந் நூலை விநியோகித்து வடக்கு-கிழக்கு மக்களின் துன்ப துயரங்களை அறியவைக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கின்றோம்" என்றும் அமைப்பாளர் பேர்டி ரணவீரகேதெரிவித்தார்.

சனவரி 22ஆம் திகதி அநுராதபுரத்தில் நடத்தப்படவிருக்கும் யுத்தத்திற்கு எதிரான பிராந்திய மாநாட்டில் 500 பேர் வரையிலும், பெப்ரவரி 26ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடத்தப்படவுள்ள தேசிய மாநாட்டில் 5000 பேர் வரையிலும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பேர்டி ரணவீரகே தெரிவித்தார் (25)

# எஸ்.பி.யை விடுவிக்கக்கோரும் மகஜரில் கையொப்பமிட மகாநாயக்க தேரர் மறுப்பு

(கொழும்பு)

சிறையிலிருக்கும் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரும் பிக்குமார்களின் மகஜர் ஒன்றில் கையெழுத்திட திப்பட்டுவாவே சித்தார்த்த மகாநாயக்க தேரர் மறுப்புத் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறான மகஜர் சமர்ப்பிக்கப்படுவது விரும்பத்தகாதது என்றும் நீதிபதிகளின் தூய்மையைத் தான் மாசு படுத்த விரும்பவில்லை எனவும் அவர் கூறியிருக்கிறார். உயர்பதவிகளில் இருப்போரின் முடிவை மதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர் ஒரு நாட்டுக்குச் சட்டம் அவசியம் என்றும் அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பத்திரிகையொன்றுக்கு பிக்குகள் வழங்கிய செவ்வியில் சுமங்கல மகா நாயக்க தேரர் குறிப்பிடும் போது, நாட்டினதும் பௌத்த சமயத்தினதும் பாதுகாப்புக்காக தேசிய சமய ரீதியாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டின் இனப்பிரச்சினை தீர்வில் இரு பிரதான கட்சிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வந்து செயற்படவேண்டும் என கருதுவதாகவும் அந்த உடன்பாட்டை விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார் . அவர் மேலும் தெரிவிக்கும் போது, சிலர் அரசியல் இலாபம் கருதி பொதுவான உடன்பாட்டுக்கு வருவதை விரும்பவில்லை என்றார். இந்த அரசாங்கம் தனித்து நின்று பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் எதிர்க்கட்சிகளின் பூரண ஒத்துழைப்பு மிக அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# போர் நடந்தாலும் சரி சமாதானச் சூழல் நிலவினாலும் சரி அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

## திருமலை ஆய்வரங்கில் எழிலன்



(திருகோணமலை)

"போர் நடத்தாலும் சரி சமாதானச் சூழல் நிலவினாலும் சரி தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.மூதூர் கிழக்கு-கட்டைபறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் நடந்த திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி ஆய்வரங்கில் அறிமுக உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்."எப்போது அடுத்த யுத்தம்? அந்த நாள் எப்போது வரும் என்று அனைவரும் எதிர்பார்க்கும் நேரத்தில் விடுதலைப்புலிகள் அபிவிருத்தி பற்றிய ஆய்வரங்காக நடத்துவது ஆச்சரியமாக இருக்கலாம்" என்று குறிப்பிட்ட எழிலன் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தி ஆகியவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் தான் பேச்சு வார்த்தையிலிருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொண்டதாகவும் தெரிவித்தார். சந்திரிகாவின் அரசிலும் அதே நிலவரம் தான் நீடிக்கின்றது. எதிர்வரும் காலத்தில் போரற்ற சூழ்நிலை நீடிக்கப்படுமிடத்து மக்களின் வாழ்வாதார முன்னேற்றங்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்பது குறித்து ஆய்வு செய்யவே கலந்துரையாடல் நடத்தப்படுவதாகவும் எழிலன் தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் கரிகாலன் உரையாற்றும் போது;

"யுத்தத்திற்கான சமாதான சூழல் தான் தற்போது நடக்கிறது. இப்பாதை மூடப்படலாம். அது எதிர் காலத்தில் மோசமான நிலையை ஏற்படுத்தும்.

திருகோணமலை மாவட்டத்தில் எத்தனை குளங்கள் உள்ளன என்ற விபரம் இன்னும் திரட்டப்படவில்லை இனித்தான் திரட்டப் படப்போவதாகச் சொல்லப் பட்டது. திருமலை மாவட்டத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு குளங்களே காரண மாக அமைந்துள்ளன. குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்படும் எமது காணிகளை மீட்கவே யுத்தம் ஏற்பட்டது" என்று கரிகாலன் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ,கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், குளம், கால்நடை, குடிநீர், மின்சாரம், வனவளம், தொழில் வாய்ப்பு, நிர்வாகப் பிரச்சினைகள் குறித்து ஆய்வரங்கில் குறைகள் தேவைகள் முன்வைக்கப்பட்டு அலசி ஆராயப்பட்டன.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலர், மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், நியாப், நிகோட் திட்டங்களின் பணியாளர்கள் மற்றும் மாகாண திணைக்களங்களின் தலைவர்கள் இவ்வாய்வரங்கில் பங்குபற்றினர். விடுதலைப்புலிகள் தரப்பில் திருமலை மாவட்டக்கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்,தமிழீழ திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன்., தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருள் மாஸ்ரர், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தமிழீழ நிர்வாக சேவைகளைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்ரர்,தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண் உட்பட பலர் பங்குபற்றினர்(25)

# பொது அறிவு,ஆளுமை,நிர்வாகத்திறமையை மாணவர்களுக்கு வளர்க்க அரசு திட்டம்

(கொழும்பு)

நாட்டின் முக்கிய மூன்று பரீட்சைகள் மீள் அமைப்பு செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற் கொண்டுள்ளது. மாணவர்கள் மத்தியில் பொது அறிவு, ஆளுமை,மற்றும் நிர்வாகத் திறமை என்பவற்றை மேம்படுத்தவே இந்த திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை இந்த திருத்தங்கள் அடுத்த ஆண்டு கல்விமான்களின் உதவியுடன் தயாரிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# போலி டொலர் நோட்டு வைத்திருந்த இரு பெண்களுக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

போலிடொலர் நோட்டுக்களைக் கொண்டு பொருட்களை வாங்க முயற்சித்த இரு பெண்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு இரத்மலானையில் போலியான ஐந்து 20 டொலர் நோட்டுக்களைக் கொண்டு இவர்கள் இருவரும் பொருட்களை வாங்க முயற்சி செய்தவேளை வர்த்தக நிலைய உரிமையாளரால் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட இவ் விருவரும் நீதிமன்றில் முன் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்யக் கோருவதென தேசப்பற்றாளர் தேசியமுன்னணி மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

**போர்நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய வேண்டுமென்றும் நோர்வேயை அனுசரணையாளர் நிலையிலிருந்து நீக்கவேண்டும் எனவும் தேசப்பற்றாளர் தேசிய முன்னணியின் மாநாட்டில் முடிவு செய்யப் பட்டது. நேற்று முன்தினம் மாலை கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.**

மீண்டும் பேச்சுவார்த்தைகளை விடுதலைப்புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் ஆரம்பிக்கக் கூடாது எனவும் முடிவுசெய்யப்பட்டது.

வணக்கத்துக்குரிய எல்லே குணவன்சதேரர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜே.வி.பி. பாராளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச, ரில்வின்சில்வா, பிரதி அமைச்சர் அர்ஜுனரணதுங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலரும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத் தின் இணைத் தலைவருமான விமல் வீரவன்ச எமது நாட்டுப் பயங்கரவாதப் பிரச்சினையை நாம் தீர்த்துக் கொள்வோம். இதில் தலையிட அமெரிக்காவிற்கோ புஷ்ஷிற்கோ எந்த வித அருகதையும் கிடையாது. ஈராக்கில் சனநாயகத்தை ஏற்படுத்தப் போகின்றோம் எனக் கூறிக் கொண்டிருந்தவர்கள் அங்கு யுத்தத்தை ஆரம்பித்து அந்த நாட்டை சுடுகாடாக்கி தமது நிர்வாகத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்று அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச வேண்டுமென ஏன் அழுத்தம் கொடுக்கிறார்கள். எமது நாடு பிரிந்தால்த்தான் அவர்களால் எமது நாட்டை ஆக்கிரமிக்க முடியும் என தெரிவித்த விமல் வீரவன்ச, கடன் கொடுக்கமாட்டோம், உணவு வழங்க மாட்டோம், பொருளாதார சீரழிவு ஏற்படும் என்று பயமுறுத்தி நாட்டைப் பிரித்து புலிகளுக்குக் கொடுத்து விட்டு தமது ஆக்கிரமிப்பை மேற்கொண்டு எமது வளங்களைச் சூறையாட முனைகிறார்கள்.

கோதுமை மாவு விநியோகத்தை பிறிமா நிறுவனம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. ஆனால் அது நிலையாக நிறுத்தப்பட்டால் சந்தோசமடைவேன். அரசாங்கம் மாவுக்கு ஒரு கிலோகிராமிற்கு வழங்கும் 7 ரூபா 50 சதமானியம் அமெரிக்க விவசாயிகளுக்கே சென்றடைகிறது.

வரலாற்றில் எமது நாட்டை பல்வேறுபட்டோர் ஆக்கிரமித்தனர். இன்று புதுவிதமான ஆக்கிரமிப்பை மேற்குலகம் ஆரம்பித்துள்ளது. இதற்கு இடமளிக்கக்கூடாது பலமுள்ள தேசிய இயக்கத்தை முன்னெடுத்து அனைத்துச் சதிகாரர்களையும் தோல்வியுறச் செய்ய வேண்டும் என்றும் விமல்வீரவன்ச கேட்டுக்கொண்டுள்ளார்.



இக்கூட்டத்தில் கலாநிதி குணதாச, அமரசேகர,பியல்பராக்கிரம, புத்ததாச விதானாராச்சி ஆகியோரும் உரையாற்றினர். பௌத்த குருமாரும் கலந்து கொண்டனர். கூட்டம் இடம் பெற்ற இடத்தில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்டிருந்தது.

# கடல் கடந்த நாடுகளுக்கான நிதியுதவி ஜப்பான் அரசு குறைக்கத் திட்டம்

(டோக்கியோ)

அடுத்த நிதி ஆண்டில் செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜப்பானிய அரசு வழங்கி வருகின்ற கடல் கடந்த நாடுகளுக்கான நிதி உதவியை குறைத்துக் கொள்ளவுள்ளது. ஏப்ரல் மாதத்திலிருந்து ஆரம்பமாகும். நிதி ஆண்டில் 7.56 பில்லியன் டொலர்களை மட்டும் ஜப்பானிய அரசு கடல் கடந்த நாடுகளுக்கான உதவித் திட்டத்தில் செலவிடவுள்ளது. முன்னைய வருடத்திலும் விட இந்நிதி உதவி 3.8 சதவீதம் குறைவானதாகும். ஆயினும் உலக நாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளில் இரண்டாம் இடத்தில் ஜப்பான் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெ. இராணுவ ஆய்வாளர்கள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம்

அமெரிக்காவைச் சேர்ந்த அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் மூவரைக் கொண்ட குழுவொன்று கடந்த திங்கட் கிழமை யாழ் குடாநாட்டிற்குச் சென்று தற்போதைய நிலவரம் குறித்து நேரில் ஆராய்ந்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் ரிச்சர்ட் ஜி. கிரீனும் இக் குழுவில இடம்பெற்றிருந்தார். உயா பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பிரதேசங்கள், முகமாலை சோதனைச் சாவடி ஆகியவற்றிற்கும் சென்று பார்வையிட்டார்கள். யாழ்.பொது நூலகம், யாழ்.கோட்டைப்பகுதி மறவன்புலவு சமாதானக் கிராமம் ஆகிய இடங்களையும் பார்வையிட்டனர். குடாநாட்டின் நடைமுறை பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து படை அதிகாரிகளுடன் கருத்துக்களையும் இவர்கள் பரிமாறியுள்ளார்கள். விமான மூலம் பலாலி சென்ற இக்குழு வினரை யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் டி.எம்டி. அல்விஸ் வரவேற்று யாழ் குடா நாட்டு பாதுகாப்பு நிலைமைகள் குறித்து விளக்கமளித்தார்.

இவ்விஜயம் அமெரிக்கா - சிறிலங்கா நாடுகளுக்கிடையிலான இராணுவ நட்புறவு விஜயம் என்று சிறிலங்காவின் இராணுவ வட்டாரங்கள் கருத்துக் கூறியுள்ளன.

# விசேட நடவடிக்கைப் பிரிவுக்கு 1000 பேரை இணைக்க நடவடிக்கை

விசேட நடவடிக்கைப் படைப்பிரிவுக்கு புதியவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 1000 பேர் வரையில் இந்தப்படைப்பிரிவில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (32)

# சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாட்டுக்கு அனுப்புவோரை தடுக்கப் பிரேரணை

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவோரைத் தடுக்கும் வகையிலான பிரேரணை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. 1948ஆம் ஆண்டு தற்போது நாட்டில் அமுலில் உள்ள குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின்படி சட்டவிரோதமாகக் ஆட்களை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்புபவர் குற்றவாளியாகக்காணப்படுவதற்கு வாயப்புகள் இல்லை. 1948 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பலர் சட்டவிரோதமாக நாட்டுக்கு வருவதைத் தடுப்பதற்காக குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் தண்டனைக் காலம் அதிகரிக்கப்பட்டது என்றாலும், அதன் மூலம் சட்டவிரோத குடிவரவு குடியகல்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தக் கருத்துக்களை சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விஜித் மலலகொட தெரிவித்தார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற குடியகல்வு தொடர்பான மாநாடு ஒன்றில் உரையாற்றிய அவர், குடிவரவு குடியகல்வு சட்டங்கள் ஐரோப்பிய நாடுகளில் மிகவும் இறுக்கமானவையாக உள்ளன. எனினும் இலங்கையில் இந்தச் சட்டம் இறுக்கமின்மை காரணமாக குடியகல்வின்போது ஏற்படும் மரணங்களுக்குப் பொறுப்புக் கூற முடியாத நிலை உருவாகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை நேற்று நடைபெற்ற அமர்வை ஏற்பாடு செய்திருந்த புலப்பெயர்வு தொடர்பான சர்வதேச அமைப்பே மத்திய கிழக்கில் யுத்தம் ஏற்பட்டபோது ஆயிரக்கணக்கான இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர உதவியது என்பது நினைவுகூறத்தக்கது. (32)

# ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

வரும் 2005 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகளை ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கமைய சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான கொடுப்பனவுத்திகதிகள் வருமாறு சனவரி-12, பெப்ரவரி-10, மார்ச்-10, எப்ரல்07, மே-12, யூன்09, யூலை-12, ஓகஸ்ட்-11, செப்ரெம்பர்-08, ஒக்ரோபர்-06, நவம்பர்-10, டிசம்பர்-08 ஆகிய திகதிகளில் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 4ஆம் ஆண்டு நினைவுகளுடன்

| தாயுடன் | | மண்ணுடன் |
|---|---|---|
| 19 | | 23 |
| 04 | | 12 |
| 1932 | | 2000 |



அமரர் உயர்திரு
**சின்னையா சிவலிங்கம்**
(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)

மலர்ந்த முகத்தின்
மறவாத நினைவுகள்
என்றும் எம்முடன்
வாழும் ஐயா...

தகவல்
மோ.சுதர்சினி (மகள்)
வவு/புனி.இந்துக் கல்லூரி
லோ.கவிதா (மருமகள்)
மு/கூழா அ.த.க.பாடசாலை.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உறவினர்.

(5417)



## 02ஆவதுபிறந்தநாள் வாழ்த்து

சிறிக்குமார் சுயாதா (நோர்வே) இவர்களின் செல்வப் புதல்வன்

## சிகாதரன் (நோர்வே)

இவரின் இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

இவரை பெற்றோர் சீரும் சிறப்புடன் வாழ மனமார வாழ்த்துகின்றார்கள். இவர்களுடன் உறவினர்களான இந்தியாவில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சின்னத்துரை, தவமணி, அம்மப்பா, அம்மம்மா, கணேசன், லக்சுமி (இந்தியா), பெரியப்பா, பெரியம்மா, ரஞ்சன் மேகலா, அண்ணன்மார், நியோபயன், நிமின்சிகா, நோாப்ஸ்சன் (நோர்வே), பெரியப்பா, பெரியம்மா ராதா, லக்சுமி, அக்காமார் கலையா, சாழினி, அண்ணா பிறைவின்குமார் (இந்தியா) பெரியப்பா, பெரியம்மா, சிறிகரன், சர்மிளா, அண்ணன்மார், சிமாஸ்ரன், சினோஸ்ரன், அக்கா சிபிகா, பெரியமாமா, சின்னமாமா தினேஷ், வசந்தன், அன்ரி கௌசி, மற்றும் உற்றார், உறவினர்கள், மற்றும் பாட்டன், பாட்டி, தாத்தா, நயச்சிக்குடாவைச்சேர்ந்த குமரப்பா செல்லாச்சி இவர்களின் பிள்ளைகள் அனைவரும் இவரை 02ஆவது பிறந்தநாளில் சீரும், சிறப்புடனும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனிடம் வரம் வேண்டி வாழ்த்துகின்றோம்.

தகவல்:
அப்பா, அம்மா (நோர்வே)
சிறிக்குமார் சுயாதா

(5435)

# மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு-கிழக்கு மாகாண சபை
# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காரப்)

## நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
## ஆ.அ.வ கடன் இல-2043 சிறி(எஸ்.எவ்)

# கேள்வி அறிவித்தல்–இல.37

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகு செலவு சார்பாக பல்தரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ")கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் சார்பாக திருகோணமலை மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொ இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/CAARP/IR/01 தொகுதி- 01 | முல்லைத்தீவு மாவட்ட கணுக்கேணி நீர்ப்பாசனத் திட்டத்திற்கான முதன்மை வேலைகள் புனரமைப்பு. | M7 (நீர்ப்பாசனம்) | 210,000/= |
| 02 | MU/CAARP/IR/01 தொகுதி- 02 | முல்லைத்தீவு மாவட்ட கணுக்கேணி நீர்ப்பாசனத் திட்டத்திற்கான வாய்க்கால் புனரமைப்பு. | M7 (நீர்ப்பாசனம்) | 30,400/= |
| 03 | MU/CAARP/IR/01 தொகுதி- 03 | முல்லைத்தீவு மாவட்ட கணுக்கேணி நீர்ப்பாசனத் திட்டத்திற்கான வாய்க்கால் புனரமைப்பு. | M7 (நீர்ப்பாசனம்) | 33,800/= |
| 04 | BT/CAARP/RD/01 தொகுதி- 01 | மட்டக்களப்பு மாவட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான் 0-1கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி. | M7 (நெடுஞ்சாலை, பாலங்கள்) | 29,000/= |
| 05 | BT/CAARP/RD/01 தொகுதி- 02 | மட்டக்களப்பு மாவட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான் 1-2கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி. | M7 (நெடுஞ்சாலை, பாலங்கள்) | 36,000/= |
| 06 | BT/CAARP/RD/01 தொகுதி- 03 | மட்டக்களப்பு மாவட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான்2-3 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி. | M7 (நெடுஞ்சாலை, பாலங்கள்) | 25,000/= |

03. பின்வரும் தகுதிகளைக்கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்குடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலைகோரல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின், (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாக பதிவுசெய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ, இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்து முடித்தவர்களாக இருத்தல் வேண்டும்,இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின்பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதி அற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை திட்டப்பணிப்பாளர் அலுவலகம், NECORD, 55, கந்தசாமி கோயில்வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434, தொலைநகல் 026-2227401, மின்னஞ்சல் NECORD@.Sltnet. lk.)

06. கேள்வி ஆவணங்களை 2004.12.24 இலிருந்து 2005.01.07 வரை காலை 9.30இல் இருந்து பி.ப.3.30 மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/- ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

07. கேள்வி கோருபவர்முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 3ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

08. அவ்வவ்வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணை முறைகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, NECORD,55 ,கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை, என்ற முகவரிக்கு 2005 தை 17 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2005 தை 07 முற்பகல் 11.30இக்கு NECORD, 55, கந்தசாமிகோவில் வீதி, திருகோணமலையில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருபவருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

து.லங்காநேசன்,
கேள்விச்சபை தலைவர்

(எ.1098)

# இங்கிலாந்துடனான டெஸ்ட் தோல்வி
# தென்னாபிரிக்க அணியில் பெரும் மாற்றம்

இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் 7 விக்கெட்டுக்களால் தோல்வி கண்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி இரண்டாவது போட்டிக்குத் தயார்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அதன்படி இந்திய சுற்றுலாவின்போது விசாரணைக்குப் பயந்து போட்டிகளைத் தவறவிட்ட ஹேர்சல் கிப்ஸ் இரண்டாவது போட்டியில் பங்கேற்கவுள்ளார். இவர் கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக முதலாவது போட்டியில் பங்கேற்கவில்லை.

அத்துடன் பயிற்சிப் போட்டியில் இங்கிலாந்தின் 7 விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்துவீச்சாளர் கார்ல் லோங்வெல்ட்டும் இரண்டாவது போட்டியில் இணைக்கப்பட்டுள்ளார். முதலாவது போட்டியைத் தவறவிட்ட சகலதுறை வீரர் சாண்டர்டி பிரைனும் இரண்டாவது டெஸ்டுக்கு இணைக்கப்பட்டுள்ளார்.



அத்துடன் முதல் போட்டிக்குத் தெரிவாகி தொண்டையில் வருத்தம் காரணமாக பங்கேற்க முடியாது போன நிக்கிபோயேயும் 26 ஆம் திகதிய போட்டியில் பங்கேற்பார்.

இப்போட்டிக்கு அழைக்கப்பட்டிருக்கும் லோங்வெல்ட் தனது வருகை கிறிஸ்மஸ் பரிசு எனத் தெரிவித்துள்ளார். 30 வயதான இவர் பல சர்வதேசப் போட்டிகளில் பங்கெடுத்திருப்பினும் குறிப்பிடக்கூடிய வகையில் சாதனை படைக்கவில்லை. ஆனால் தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# மைக்கல் வோனிடம் முறைகேடு
# ஹோலுக்கு ஐ.சி.சி. கண்டனம்

இங்கிலாந்துடனான ஆட்டத்தில் மைக்கேல் வோகனிடம் ஆக்ரோஷமான செய்கையைச் செய்ததாக தென்னாபிரிக்க வீரர் ஹோலை கண்டித்துள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை.

போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் ஆட்டமிழந்தார். இதையடுத்து இருப்பிடம் நோக்கிச் செல்லுமாறு ஆக்ரோஷமான முறையில் செய்கையால் தெரிவித்தார் ஹோல். இவர் மேற்கொண்ட மாதிரியான ஆக்ரோஷமான நடவடிக்கை அனுமதிக்கப்படமாட்டாது. ஹோல் தனது தரப்பு விளக்கத்தை அளித்தாலும் கூட, ஐ.சி.சி விதிமுறைகளை அவர் மீறியுள்ளதாக லொயிட் தெரிவித்துள்ளார்.




# போட்டித் தொகை வழங்குவதில் சிக்கல்
# மேற்கிந்தியத்தீவு அவுஸ்திரேலியா செல்லுமா?

அவுஸ்திரேலியாவில் நடக்க இருக்கும் 3 நாடுகள் போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணி கலந்து கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளது.

அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் அணிகளுக் கிடையேயான 3 டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொண்ட தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் 3 நாடுகள் போட்டியில் மேற்கிந்திய தீவு அணி கலந்து கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளது. ஏனெனில் இந்தத் தொடரில் கலந்து கொள்ளும் 14 பேர் கொண்ட அணிக்கு போட்டித் தொகையாக 2 கோடியே 25 லட்சம் ருபாய் தரவேண்டும் என்று அணித் தரப்பில் அந்நாட்டு கிரிக்கெட் சபையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே பணச் சிக்கலில் சிக்கித் தவித்துக்கொண்டு இருக்கும் மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை இதற்கு மறுப்பு தெரிவித்து விட்டது. இதனால் மேற்கிந்தியத்தீவு அணி அவுஸ்திரேலியா செல்லுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

# இந்திய - வங்கதேச அணிகளுக்கிடையே
# முதலாவது ஒரு நாள் போட்டி இன்று





இந்திய - வங்காளதேசம் அணிகள் இடை யேயான 3 ஒரு நாள் போட்டித் தொடரில் முதற்போட்டி சிட்டஹொங்கில் இன்று நடக்கிறது.

டெஸ்ட் போட்டிக்கான அணியில் இடம்பெற்ற கும்ளே, லட்சுமனன் ஆகியோர் ஒரு நாள் தொடரில் நீக்கப்பட்டுள்ளனர். டெஸ்ட் தொடரில் ஹர்பஜன்சிங்கின் 'தூஷ்ரா' வகைப் பந்து வீச்சு சந்தேகம் அளிக்கும் என்று ஐ.சி.சி.அறிவித்துள்ளது. இதனால் இன்றைய போட்டியில் அவர் சேர்க்கப்படுவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. என்றாலும் ஐ.சி.சி.விதித்த கட்டுப்பாட்டின் 'தூஷ்ரா' வகைப் பந்து வீச்சை இன்று ஹர்பஜன்சிங் வீசலாம். என எதிர்பார்க்கப்படுகின்றது.

பலவீனமான வங்களா தேச அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் தொடர்ந்து சாதனைகளைப் புரிந்தனர். ஒருநாள் தொடரிலும் இந்திய அணி பலவீனமான வங்களாதேசத்தை எளிதில் தோற்கடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆண்டின் டென்னிஸ் சம்பியன்களாக
# ரோஜர் பெடரர், மிஸ்கினா தேர்வு





2004 ஆம்ஆண்டு உலக டென்னிஸ் சம்பியன்களாக சுவிஸ் வீரர் ரோஜர் பெடரரும், ரஷ்ய வீராங்கனை அனஸ்டாசியா மிஸ்கினாவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சுவிட்ஸர்லாந்து வீரரான ரோஜர்பெடரர் மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர். மிஸ்கினா பெண்கள் டென்னிஸில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை நிலைநாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச டென்னிஸ் சங்கம் (ஐ.டி.எப்) திங்கட்கிழமை இந்த விருதுகளை அறிவித்தது. மேலும் பெடரர் இந்த வருடம் ஒற்றையர் பிரிவில் 11 பட்டங்களை வென்றிருக்கிறார் என்றும் அது தெரிவித்துள்ளது.

# பந்து வீச்சு முறையை மாற்றிக்கொள்ளமாட்டேன்
# பாகிஸ்தான் முன்னணிப் பந்து வீச்சாளர் அக்தர்

பந்துவீச்சு முறையை மாற்றிக் கொள்ள மாட்டேன் என்று பாகிஸ்தான் வீரர் சோயிப் அக்தர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவர் சோயிப் அக்தர். ராவல் பிண்டி எக்ஸ் பிரஸ் என்று அழைக்கப்படும் இவர் 100 மைல் (160 கிலோ மீற்றர்) வேகத்தில் வீசி அதிவேகத்தில் பந்து வீசுபவர்கள் பட்டியலில் முதலிடத்திலுள்ளார்.

பொதுவாக வேகப் பந்துவீச்சாளர்கள் 80 முதல் 100 அடி தூரத்தில் இருந்து ஓடி வந்து பந்து வீசுவார்கள். ஆனால் அக்தர் 120 அடி தூரத்தில் இருந்து ஓடிவந்து பந்து வீசி வருகிறார். இவ்வளவு தூரத்தில் இருந்து அவர் ஓடி வந்து பந்து வீசுவதால் தாமதமாவதுடன், விரைவிலேயே சோர்வடைந்து விடுகிறார். எனவே ஓடி வரும் தூரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம், முன்னாள் தலைவர் இம்ரான்கான், பாப் உல்மர் ஆகியோர் அக்தருக்கு யோசனை தெரிவித்து இருந்தனர். இதற்கு அக்தர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது;



ஒரு விமானம் வானத்தில் வேகமாகப் பறக்க வேண்டும் என்றால் அது தரையில் இருந்து கிளம்பும்போது வேகமாக ஓடினால் மட்டுமே முடியும். அதேபோல்தான் எனது பந்துவீச்சும் என்றார்.

# 2012 இல் பிரான்சில் ஒலிம்பிக்கை நடத்த
# ஆதரவு தருமாறு அஞ்சுவிடம் கோரிக்கை

உலகின் மிகப் பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக்போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. ஓகஸ்ட் மாதம் கிரீஸ் தலைநகர் எதென்சில் ஒலிம்பிக்போட்டி நடந்தது. 2008ஆம் ஆண்டுக்கான போட்டி சீனத் தலைநகர் பீஜிங்கில் நடக்கிறது.

2012ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்த பரிஸ் (பிரான்ஸ்), லண்டன் (இங்கிலாந்து), மாட்ரீட் (ஸ்பெயின்), மொஸ்கோ (ரஷ்யா) ஆகிய நகரங்கள் விண்ணப்பித்துள்ளன.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை பரிஸ் நகரில் நடத்த ஆதரவு தருமாறு அந்நகர மேயர், இந்தியாவின் முன்னணித் தடகள வீராங்கனையான அஞ்சு ஜோர்ஜ்சிடம் கேட்டுள்ளார். இது தொடர்பாக பரிஸ் மேயர் பெர்ட்ரேண்ட், அஞ்சுவுக்குக் கடிதமும் எழுதியுள்ளார்.

# வீரர்கள் மேலும் திறமைகாட்ட வேண்டும்
## வோன்

முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியை வென்ற போதிலும் தமது வீரர்கள் மேலும் திறமையாகச் செயற்படவேண்டும் என்பதை இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோன் வலியுறுத்தியுள்ளார். முதல் டெஸ்டில் முழுத் திறமையையும் வீரர்கள் வெளிக்காட்டவில்லை என்றும் 80 வீத திறமையே வெளியிடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

முதல் போட்டியில் அன்ருஸ்ரோஸ். சைமன் ஜோன்ஸ் ஆகியோர் மட்டுமே திறமை காட்டினர் என்று கூறிய அவர், அப்போட்டியில் தென்னாபிரிக்காவின் கை ஓங்கியிருந்தாலும் சைமன் ஜோன்ஸ் அதனை மாற்றிவிட்டார் என்று கூறியுள்ளார்.

# மாவட்ட சிறந்த வீர, வீராங்கனைகளுக்கு
# விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

கிளி. மாவட்டத்தைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கிளி .அரச அதிபர் வழங்கிய விளையாட்டு உபகரணங்கள் நேற்று நடைபெற்ற மாவீரர் நினைவு வெற்றிக் கேடய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியின் முடிவில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஊக்குவிப்புப் பெற்ற வீரர்கள் விபரம் பின்வருமாறு.

உதைபந்தாட்டம் து. சிவகுமார், கா. வசந்தன், அ. வில்வராசா, அ.வெஸ்லி ரமேஸ்காந்த், தி.சுதாகரன், த.தயாகரன், து.மோகனதாஸ், ச.சந்திரவர்மன், ந.சுரேஸ்குமார், செ.ஜெயபாரன், ச.சத்கன், வே.சதீஸ்குமார், சி.பாஸ்கரன், த.சந்திரன், எஸ். றொனால்ட், எஸ்.குலேந்திரன்.

மெய்வல்லுநர்.- ம.சுபாஜினி, எஸ் கெங்காநேசன், கா. ஜெயகுமாரி.

காரத்தே- சி. விஜயராஸ், எஸ்.அருள்ஜென்சன், எஸ்..லகுநாதன்,எஸ்.,மேரி அருள் கல்பனா,எஸ். ரேகா.

# மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்து
# லக்கிஸ்ரார் அணி சம்பியனானது

மாவீரர் நினைவாக கிளி. மாவட்ட ரீதியில் நடாத்தப் பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி வெற்றி பெற்று மாவீரர் வெற்றிக் கேடயத்தையும், பணப் பரிசினையும், சுவீகரித்துக்கொண்டது.. அத்துடன் சிறந்த விளையாட்டு வீரர் (சி.சுதாகரன்), சிறந்த கோல் காப்பாளருக்கான (சுஜருடன்) பரிசினையும் இந்த அணியின் வீரர்களே சுவீகரித்துக் கொண்டனர்.

அத்துடன் தமிழீழத்தில் எட்டு மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் அணிகளுக்கிடையே கேணல் கிட்டு நினைவாக நடத்தப்படவுள்ள உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியையும் லக்கிஸ்ரார் அணி பெற்றுள்ளது.

நேற்று மாலை 3.30 மணியளவில் மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் 4-2 என்ற கோல்கணக்கில் லக்கிஸ்ரார் அணி நாச்சிக்குடா சென்மேரிஸ் அணியை வெற்றிகொண்டது.


ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே லக்கிஸ்ரார் வீரர் ஜெயந்தன் கோல்போட்டார். தொடர்ந்து மற்றுமொரு சந்தர்ப்பத்தில் லக்கிஸ்ரார் அணிவீரர் சுதாகரன் கோல் போட்டார். தொடர்ந்து ஜெயந்தன் மற்றுமொரு கோல் போட்டார்.ஆட்டத்தின் பிற்பகுதியில் முறையற்ற ஆட்டங்களால் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி லக்கிஸ்ரார் வீரர் சுதாகரன்,சென்மேரிஸ் அணிவீரர் ஜெல்மன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர். ஆட்டத்தின் முடிவு நேரத்தில் தமது திறமையான ஆட்டத்தை சென்மேரிஸ் அணி வெளிப்படுத்தியது. இச்சந்தர்ப்பத்தில் இந்த அணி வீரர் சுதர்சன் கோல் ஒன்றைப் போட்டார். முடிவில் 4-2 என்ற கோல் கணக்கில் லக்கிஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

இப்போட்டிக்குப் பிரதம நடுவராகக் கனடாவிலிருந்து நடுவர்களுக்கான பயிற்சியை வழங்க வருகை தந்துள்ள FIFA நடுவர் கணேசம், பக்க நடுவர்களாக கனடாவிலிருந்து வருகை தந்துள்ள மற்றொரு நடுவர் பவளகாந்தன் மற்றும் சு.புவனேந்திரராசா ஆகியோர் கடமையாற்றினர்.



தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, FIFA நடுவர் கணேஸ், கிளி. அரச செயலகத்தைச் சேர்ந்த ஜெயராணி ஆகியோர் உரையாற்றினர். பரிசில்களை கி.பாப்பா, கணேஸ்,ராஜா கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா, தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம. பத்மநாதன், கிளி.மாவட்டத்தின் முதல் மாவீரர் சாத்தானின் சகோதரர் ஜெயக்குமார், திரைப்பட வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர் ராதா ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

## சிந்தனைக்கு



*இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.*

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## ஜே.வி.பி மாறவில்லை

போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்றும், நோர்வேயை அனுசரணையாளர் நிலையில் இருந்து நீக்க வேண்டும் எனவும், தேசப்பற்றாளர் தேசிய முன்னணி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள அதே சமயத்தில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ புத்தாண்டு பிறந்ததும் விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் குறித்து ஜே.வி.பி யுடன் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளதாக அரசாங்கத் தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசப்பற்றாளர் தேசிய முன்னணியின் மாநாட்டுத் தீர்மானத்திற்கும், ஜே.வி.பி யுடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் என்னதொடர்பு?எனச் சிலர் கேட்கலாம். ஆனால் இது மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் விவகாரம் அல்ல. களநிலை யதார்த்தத்தை விளங்கிக் கொள்வதற்கான எடுத்துக் காட்டாகும்.

தேசப்பற்றாளர் தேசிய முன்னணி பௌத்த–சிங்கள அடிப்படைவாதிகளின் இவ்அமைப்பு, இனப்பிரச்சினைக்கு ஆரம்பம் முதலே இனவாதத் தீர்வை முதன்மைப்படுத்தும் அமைப்பு. இவ்அமைப்பு யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர வேண்டும் எனக் கோருவதும்,தீர்மானம் நிறைவேற்றுவதும் ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதோ, புதுமையானதோ அல்ல. ஆனால் இவ்அமைப்பில் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச, மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் பிரதி அமைச்சருமான அருச்சுணரணதுங்க போன்றவர்கள் பங்கு வகிப்பதுதான் இங்கு முக்கியமானது.

அதிலும் விமல் வீரவன்ச இவ்அமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவராகும். இவரும் பங்கு கொண்ட மாநாட்டிலேயே யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வர வேண்டும். நோர்வேயை அனுசரணையாளர் என்ற நிலையில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. விமல் வீரவன்ச நோர்வேயை வெளியேற்ற வேண்டும் எனக்கோருவது ஒன்றும் புதியதல்லதான். ஆனால் யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரவேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரிப்பது அவரின் மனக்கிடக்கையை வெளிப்படுத்தும் ஒன்றாகவே கொள்ளத்தக்கதாகும்.

இது ஒரு புறம் இருக்க இத் தேசப்பற்றாளர் தேசிய முன்னணியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினரான அருச்சுணரணதுங்க பங்கேற்பதும் அம் முன்னணியின் தீர்மானத்தை ஆதரிப்பது என்பதும் ஆபத்தாகவே கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ஏனெனில் சுதந்திரக் கட்சி யுத்த நிறுத்தம் தொடர்பாகவும் நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரம் குறித்தும் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்ற கேள்வியை இது எழ வைக்கக் கூடியதாகும் .

இத்தகையதொரு நிலையில் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து ஜே.வி.பி யுடன் புத்தாண்டு பிறந்ததும் சனாதிபதி சந்திரிகா பேசப்போவது என அறிவித்துள்ளமையே முதற்பந்தியில் இரண்டு விடயங்களுக்கும் முடிச்சுப் போட வேண்டிய நிலையை உருவாக்கியது.

அதாவது யுத்த நிறுத்தத்தையும் நோர்வேயின் ஏற்பாட்டாளர் பணியையும் நிராகரிக்கும் ஜே.வி.பி யுடன் சனாதிபதி சந்திரிகா பேச்சு நடாத்தி எதனைக் காணப்போகின்றார்? அதாவது ஜே.வி.பி தனது நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும் மேற்கொள்ளுமா? அதற்கான வாய்ப்புண்டா? என்பதே இங்குள்ள முக்கிய வினாவாகும்.

ஜே.வி.பி விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையை ஏற்கப் போவதில்லை எனவும் இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சுவார்த்தையை சனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்தால் அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போவதாகவும் ஏற்கனவே எச்சரித்துள்ளது. இது ஒரு புறம் இருக்க ஜே.வி.பி அண்மைக்காலத்தில் நோர்வே அரசிற்கு மட்டுமல்லாது மேற்குலக அரசுகளுக்கு எதிராகவும் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது.

அதிலும் குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தையை நிதி உதவிக்கான நிபந்தனையாக முன்வைத்தமையானது ஜே.வி.பியை கடும் சீற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இதன் வெளிப்பாடாகவே ஜே.வி.பியினர் மேற்குலகத்தவரை "வெள்ளைத் தோல்" காரர்கள் என இனரீதியாகச் சாடத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடாத்துவதினால் கிட்டப்போகும் அனுகூலம் ஏதுவாக இருக்கமுடியும்? அதிலும் குறிப்பாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து ஜே.வி.பி யுடன் பேசுவதென்பது பயன்தரும் ஒன்றாக இருக்க முடியுமா?.

சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி.யுடன் பேச்சுக்களை நடத்துவதன் மூலம் அதனை ஒரு இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வரலாம் என அபிப்பிராயம் வெளியிடுவதுண்டு. ஆனால், ஜே.வி.பி எப்பொழுதுமே சனாதிபதியின் நம்பிக்கை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நடந்து கொண்டதாக இல்லை. மாறாக ஜே.வி.பி யின் எதிர்ப் பிரச்சாரமே வலுவடைந்து செல்வதாகவுள்ளது இந்நிலையில் ஜே.வி.பி மீது சனாதிபதி சந்திரிகா எதன் அடிப்படையில் நம்பிக்கை கொண்டுள்ளாரோ தெரியாது. ஆனால் புத்தாண்டில் ஜே.வி.பி யுடன் பேசுவதற்கு சனாதிபதி தீர்மானித்திருப்பதால் இவ்வேளை ஜே.வி.பி யை விட அவர் புத்தாண்டில் காலமாற்றத்தில் நம்பிக்கை கொண்டுள்ளாரோ தெரியவில்லை.

# ஆளும் கூட்டணி அமைச்சரவையில் ஜே.வி.பி- சு.க அமைச்சர்கள் மோதல்

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சி அமைச்சரும் ஜே.வி.பி அமைச்சரும் அமைச்சரவையில் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சரவையில் நேற்று முன்தினம்ஜே.வி.பி அமைச்சரக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சரான தி.மு.ஜெயரட்னவுக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. புதிதாக சுமார் 10 இலட்சம் தொலைபேசிகளை இணைப்பதற்காக சீனாவின் நிறுவனம் ஒன்று முதலிடவுள்ளதாகவும். அதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்க வேண்டும் எனவும் சு.க. அமைச்சர் கேட்டுக்கொண்டபோது அதனை எதிர்த்த ஜே.வி.பி யின் அமைச்சரான அனுரகுமார திஸாநாயக்க, தனியார் மயப்படுத்தலுக்கு இடமளிக்க முடியாது எனத் தெரிவித்தார். இதன்போதே இரண்டு தரப்புக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டன. ஜே.வி.பி.யின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர் கொண்டுவந்த இந்தத் திட்டத்திற்கு இறுதியில் இக் கூட்டத்தில் அங்கீகாரம்கிடைக்கவில்லை.

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் கம்யூனிஸ்ட் கட்சி ஓர் அங்கமல்ல

-அரசியலமைப்பு விவகார அமைச்சர் குணசேகர

கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒரு அங்கம் அல்ல என அரசியல் யாப்பு விவகார அமைச்சர் குணசேகர தெரிவித்துள்ளார்.

எமது கட்சி அரசின் ஒரு அங்கமாகவே செயற்படுகின்றதென அவர் தெரிவிதுள்ளார் நாட்டில் சமாதான செயற்பாடுகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் நிலைப் பாட்டிற்கும், இலங்கை கம்யூ னிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டிற் குமிடையில் தெளிவான மாற்றம் இருக்கின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனால் தமது கட்சிக் கூட்டமைப்பில்இணைந்து கொள்ளவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பிறீமா ஆலை தொழிற்சங்கத்தினர் நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டம்

திருகோணமலையில் அமைந்துள்ள பிறீமா ஆலை தொழிற்சங்கத்தினர் நேற்று [illegible]யின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் பணிப்புறக்கணிப்பையும் மேற்கொண்டுள்ளனர். இந்தப் போராட்டம் குறித்து சங்கத்தின் பேச்சாளர். எம்.பி.சவஞ்ந்த சமரசிங்க தெரிவிக்கையில் எமது தேவைகள் குறித்தோ அல்லது நலன்கள் குறித்தோ நிர்வாகத்தினர் கவனம் செலுத்துவதில்லை. அத்துடன் மாவிற்கு பொய்யான தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றனர். சட்டத்திற்குப் புறம்பாக வெளியாருக்கு மாவினை விற்பனை செய்கின்றனர். அவற்றை எதிர்த்தே நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எனக் குறிப்பிட்டனர். (32)

# மிலிந்தமொறகொட இன்று ஆர்மிரேச்சுடன் சந்திப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட இன்று அமெரிக்க பிரதி ராஜாங்க செயலர் ரிச்சட்ஆர்மிரேச்சைச் சந்திக்கவுள்ளார். இதன்போது இலங்கை அரசாங்கத்தின் அணுகு முறை குறித்து உண்மை விளக்கத்தை அவருக்கு வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சந்திப்பு வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ளது ஜே .வி பி யுடனான கூட்டு அரசாங்கம் சமாதான முயற்சியில்காட்டி வரும் அசமந்தப் போக்குத் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது அவர் தெரிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. (32)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில்-

# ஆளும்,எதிர்க் கட்சிகளிடையே இணக்கமேற்படுத்த மகாநாயக்கதேரர்கள் மூவர் முயற்சிப்பராம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சிறிலங்கா அரசையும் எதிர்க் கட்சிகளையும் பொது இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு பௌத்த பீடாதிபதிகள் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

மூன்று நிக்காயாக்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்களும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவையும் எதிர்க் கட்சித்தலைவர் ரணில்விக்கிரம சிங்கவையும் விரைவில் சந்தித்து, இது தொடர்பாகப் பேசவுள்ளனர். இது தொடர்பாக மல்வத்தை மஹா விகாரையின் திப்புட்டுவ சிறி சுமங்கல தேரர் தெரிவிக்கையில், "பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் இன்று எழுந்துள்ளது. இரு தரப்பினரும் உடன்பாட்டுக்கு வந்தால் அந்த உடன்பாட்டில் எட்டப்பட்ட தீர்வை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி அது நிராகரிக்கப்படுகிறதா? இல்லையா? என்பதைப் பற்றிப் பார்க்கலாம்."ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அரசியல் சுயலாபத்துக்காக ஆளுக்காள் பிரிந்து நின்றுகொண்டு உடன்பாடு இல்லாத போக்கிலேயே அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தால் மட்டும் 'இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுவிட முடியாது. அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பும் வேண்டும்' ஆகவே, அரசும் எதிர்க்கட்சிகளும் சிந்தித்துச் செயற்பாட்டு வாய்ப்புக்களை உறுதி செய்துகொள்ள வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வு காண பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்."- என்றார்.

# பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்கள் 3 நாள் சுகவீன லீவுப் போராட்டம்

பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி வைத்தியர்கள் நேற்றுமுதல் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எதிர்வரும் 3 நாட்களுக்கு இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் பிரதான அமைப்பாளர் டி.யு. பெரேரா தெரிவித்துள்ளார் வைத்தியர்களிடையே காணப்படும் சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரியே நாம் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இந்தப் போராட்டத்திற்கு அரசாங்கம் செவிசாய்க்காவிடின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கப்படும் . இன்றைய போராட்டத்தினால் கிராமப்புற வைத்தியசாலைகள் பல பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சின் பாராளுமன்ற செயலர் இல. விஜயம்

ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சின் பாராளுமன்ற செயலர் கெய்சிரோ புகுசிமா எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வரும் அவர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல அமைச்சர்களையும் சந்திக்கவுள்ளார் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜப்பானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பிய வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு பேசிய விடயங்களின் பின்னணியிலேயே புகுசிமாவின் இலங்கை விஜயம் அமைவதாக ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.(32)

-பல்வேறு பொது அமைப்புக்கள்-

# அமெ.பாதுகாப்பு ஆய்வாளர்களின் யாழ். விஜயத்திற்குக் கண்டனம்!

அமெரிக்கப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் யாழ். குடாநாட்டுக்கு இரகசியமாக வருகை தந்து சிறிலங்கா அரசாங்கப்படைகளின் முன்னரங்க நிலைகளுக்கு விஜயம் செய்துள்ளமையைப் பல்வேறு அமைப்புக்களும் கண்டனம் செய்துள்ளன. இது போர் ஒன்றுக்கே வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவிக்கையில்:

" போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடையும் தருணத்தில் போருமற்ற, சமாதானமுமற்ற காலப்பகுதியில் மக்களின் சுமுக நிலை தோன்றாத சூழலில், மீண்டும் போர் மூளாமல், சமாதானத்தை வலியுறுத்தி,எமது மக்கள் சிறிலங்கா அரசுக்கு எதிராக சாத்வீகமான முறையில் வெகுசனப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வேளையில், உலக நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவது அனைவரும் அறிந்ததே. இவ் வேளையில் அமெரிக்கப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் குடாநாட்டுக்கு இரகசியமாக வருகை தந்து இராணுவ முன்னரங்குகளுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்வது என்ற பெயரில் சிறிலங்காவின் போர் நடவடிக்கைகளுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும் வகையில் அவர்கள் ஈடுபட்டுள்ளதை பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தவர்களாகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வு க்கழகத்தின் அறிக்கையில்,

யாழ்.குடாநாடெங்கும் சமாதானத்தை வலியுறுத்தி மக்கள் மனித சங்கிலிப் போராட்டங்களை நடாத்துகின்ற இவ்வேளையில் சமாதானத்தையும், மக்களின் எதிர்பார்ப்புக்களையும் சிதறடிப்பதாகவே அமெரிக்கப் படை அதிகாரிகளின் வருகையும், முகமாலை முன்னணிக் காவல் நிலைகளைச் சென்று பார்வையிட்டமையும், சிறிலங்கா இராணுவத்திற்கான ஆலோசனைகளும் அமைகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே அமெரிக்க அரசானது இவ்வகையான சமாதானத்தைப் பாதிக்கும் செயற்பாடுகளைக் கைவிட்டு உடனடியாகத் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் தனது 2004 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டது போல இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உண்மையான அழுத்தத்தினை சிறிலங்கா அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும். இல்லையேல் தமிழ்மக்கள் தமது விடுதலைக்கான அவர்களது தன்மானத்தை நிலைநாட்டுவதற்காகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் வழியிலே சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியது தவிர்க்க முடியாமல் போய்விடும் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கும், அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம் அமெ.தூதுவருக்கு எழுதிய கடிதத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டத்தைச் சரியான கோணத்தில் அமெரிக்கா அணுக வேண்டும் என எமது முன்னைய கடிதத்தில் கோரி யதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

அமெரிக்கத் தரப்பு இங்குள்ள களநிலையை நேரடியாக அறிந்து கொள்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் எமது அடிப்படை மனித உரிமைகளையே நிராகரித்து நிற்கும் சிறிலங்கா இராணுவத்துடன் மட்டும் சேர்ந்து பார்வையிடுதலே எமக்கு பலவித அச்சங்களையும், நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்துகின்றன.

அமெரிக்கா நடுநிலையாக, நியாயமாக நடந்து கொள்ளும் என்றே நாம் திடமாக நம்புகிறோம். அப்படியான சூழ்நிலையில் அது சிக்கலின் ஒருபக்கம் சாய்கிறதென அச்சமுறும் வகையில் இந்த விஜயங்கள் அமைகின்றன என்பதை மிக மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எனவே இவ்வாறான பக்கச் சார்பாகத் தோற்றும் நடவடிக்கைகளை தவிர்க்கும் படியும், எமது நியாயமான விடுதலைப் போராட்டத்தை அவ்வாறு அங்கீகரித்து, ஜே.வி.பி போன்ற இனவாத, தோல்வியுற்ற கம்யூனிஸ் தத்துவ வாதிகளைப் புறந்தள்ளி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு சிறிலங்கா அரசையும் தென்னிலங்கை அரசியற் சக்திகளையும் தூண்டுமாறு தங்களை வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,போர் நிறுத்த ஒப்பந்தமும், சமாதான உடன்படிக்கையும் செத்துவிடுமோ என்ற அங்கலாய்ப்பில் எம் மக்களும். சர்வதேசமும் ஏங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்க அரசின் இராணுவ ஆய்வாளரின் இரகசிய விஜயம் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை இழப்பதுடன் மீண்டும் போர் ஏக்கம் மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகிறது.

அமெரிக்கா தமிழீழ மக்களின் வாழ்வுரிமைக்கான போரில் சிறிலங்கா அரசுக்குத் துணைபோவதையோ அல்லது ஆலோசனை வழங்குவதையோ உலகின் மனச்சாட்சிகள் இடம்கொடுக்க மாட்டாது என்பதை அமெரிக்க அரசு புரிந்துகொண்டு தனது நிலைப்பாட்டில் நல்ல முடிவைத் தோற்றுவிக்க வேண்டும். இதுவே இலங்கையில் நிரந்தர சமாதானத்தைத்தோற்று விக்கும்இதையே தமிழ்மக்களும் வேண்டி நிற்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(3[illegible])

## மாபெரும்...

கலந்துரையாடினர். இதன் பின்னர் கருத்து வெளியீட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இன்று நாங்கள் எமது சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டியதன் அவசியம் தொடர்பாக ஆராய்ந்தோம் இது தொடர்பான எமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் நாங்கள் அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கையளித்துள்ளோம்.

☐ *கேள்வி:-நீங்கள் கையளித்த மகஜரில் எவ்வாறான கோரிக்கைகளை முன் வைத்துள்ளீர்கள்?*

பதில்:-அதாவது நாங்கள் அரசாங்கத்தின் மீது முற்றாக நம்பிக்கை இழந்து விட்டோம். ஏனெனில் சமா தானச் சூழல் எனக் கூறப்பட்ட இந்தக் காலப்பகுதியில் அரசாங் கம் தமிழ் மக்களுக்கு எந்தவித ஆக்க பூர்வமான தீர்வையும் வழங்க முன்வரவில்லை. மாறாகப் பல்வேறு வழிகளினால் எம்மை ஏமாற்றத்திற்குள்ளாக்கியே வருகிறது. எம்மை எமது சொந்த இடங்களில் குடியமரச் செய்வதாகக் கூறி ஏமாற்றி வருகிறது. நாங்கள் நிலையான வாழ்விடமின்றி அவலப்பட்டு வருகின்றோம். அத்தோடு அப்பட்டமான பொய்யான தகவல்களை ஊடகங்களினூடாக வெளியிட்டு எம்மை ஏமாற்றி வருகின்றது. எனவே அவற்றை இனியும் நாங்கள் நம்பத் தயாரகவில்லை. நாங்கள் இனி எமது சொந்த இடங்களுக்குச் செல்வதாகவிருந்தால் எங்கள் மக்கள் அனைவரும் சேர்ந்து போராட்டம் செய்து, எமது இடங்களுக்குச் செல்ல நாங்கள் தயாராக விருக்கிறோம். இதைத்தான் அரசியல்துறைப் பொறுப்பாளரிடமும் கேட்டுள்ளோம் நீங்கள் அரசுடன் பேசியோ அல்லது வேறு வழியினூடாகவோ எமது இடத்தைப் பெற்றுத் தாருங்கள் அல்லது நாங்களே இணைந்து போராடி எமது இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனக் கேட்டுள்ளளோம் என்றார்

நேற்றுக் காலை 11 மணிக்குக் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தென்மராட்சி, கீரிமலை வலிகாமம், காங்கேசன்துறை மயிலிட்டி, பலாலி போன்ற பகுதிகளிலிருந்து 55 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதோடு தமது இடங்களுக்குச் செல்வதற்கான போராட்டத்தை உறுதியாக நடத்துவோமென அரசியல்துறைப் பொறுப்பாளர் முன்னிலையில் உறுதியெடுத்துக் கொண்டனர். இக் கலந்துரையாடலில் தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர், சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி , விடுதலைப்புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச.சு)

## அரசின்...

தென்மராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் வருகை தந்த ஆயிரக்கணக்கான மக்கள், கைதடிச் சந்தியிலிருந்து கூடி வீதியின் இருமருங்கிலும் கைகளை கோர்த்தவாறு மு.ப 10.00 முதல் 11.00 மணிவரை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் உருவப்படங் களையும்,, சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வாசக அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

கைதடியூடாகச் செல்லும் கண்டி வீதிப் பகுதியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள்திரண்டு வீதியின்இருமருங்குகளில் மனித சங்கிலியாகக் கைகோர்த்து நின்று தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளையும், அபிலாசைகளையும் வெளிப்படுத்தும் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில் அனைத்து மக்களும் ஊர்வலமாக கைதடிச் சந்தி நோக்கிச் சென்று அங்கு கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் தலைமையில் இடம்பெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கண்டன உரைகளையும் நிகழ்த்தினர். (33,28,27)

## அரசாங்கத்தின்...

புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன்பாலசிங்கம் அவர்களிடம் லண்டனில் வைத்துக் கையளிக்கப் பட்டிருந்தது.இதில் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிய வருகின்றது.

# மட்டு. நகரில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் பலி

மட்டக்களப்பு நகரில் நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் உந்துருளியில் சென்ற இரண்டு இளைஞர்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

அரசடிச் சந்தியிலுள்ள ஆஞ்சநேயர் மரக்காலைக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உந்துருளியில் சென்ற இரண்டு இளைஞர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள். இந்தச் சம்பவத்தின்போது கொல்லப்பட்டவருடன் வந்த மற்றுமொரு இளைஞர் தப்பியோடியுள்ளார். கொல்லப்பட்டவரும், தப்பியோடியவரும் உந்துருளியில் சென்று இறங்கிய சமயம் இந்த சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை. வெள்ளைநிற மேலணியுடன் காணப்படும் இவரின் சடலமருகே பஜாஜ் கலிபர் 115 என்ற உந்துருளியும் காணப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களையும் இதுவரைஅடையாளம் காணப்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (32)

# அம்பாறை விநாயகபுரத்தில் மாணவன் மீது துப்பாக்கிச் சூடு

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் விநாயகபுரத்தில் நேற்று முன்தினம் மாலை 15 வயதுப் பாடசாலை மாணவனொருவன் அடையாளந் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விநாயகமூர்த்தி ஜெகநாதன் என்ற மாணவனே துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு இலக்கானவர். இவர் நேற்று முன்தினம் மாலை தனது வீட்டிலிருந்த சமயம் துப்பாக்கிச் சூடொன்று வந்து இவர் மீது பட்டதாகக் கூறப்படுகின்றது.

## நோர்வேயின்...

ஜெப்ரி லுண்ஸ்ரெட் நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார். சொற்கள் முக்கியத்துவம் வாய்ந்த நிலை இவ்வகையான அபாயகரமான உரைநடைகள் உணர்வுகளைத் தூண்டி அறியமுடியாத விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை எனவும் குறிப்பிட்டார். உதவி வழங்கும் நாடுகளின் அறிக்கையை ஜனதாவிமுக்தி பெரமுனவினரால் நேரடியாக விமர்சிக்கப்பட்டதோடு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மட்டுமன்றி சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வேயின் பங்கு மற்றவர்களினால் பொதுவாக விமர்சிக்கப்பட்டுள்ளது. எனவும் குறிப்பிட்டார்.

## சுயாட்சி...

தமிழ் மக்களை அரசு இனியும் ஏமாற்ற முடியாது. சுயாட்சி மூலம் நீதியான தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்க சிங்கள தேசம் மறுத் தால் சுதந்திரப் பயணத்தை மக்கள் முன்னெடுப்பார்கள், சந்திரிகா அரசாங்கம் இதுவரை காலமும் தமிழ் மக்களின் சுதந்திர விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செய்துவந்த, செய்து வருகின்ற பொய்ப்பிரச்சாரங்கள் இன்று பொய் என்பது அம்பலப்படுத்தப்பட்டு உலகின் முன்னால் கூனிக்குறுகி நிற்கின்றது. சந்திரிகா அம்மையாரின் நரித்தனம் இனி எடுபடப்போவ தில்லை- தமிழ் மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். அதையும் மீறி இந்த மண்ணில் சிங்கள அரசினால் போர் ஒன்று திணிக்கப்பட்டால் அவற்றை எதிர்கொள்ளவும் தேசியத்தலைவர் அவர்களின் பாதையில் தமிழ் மக்கள் தயாராகவே உள்ளார்கள். அதற்கு சாட்சியே இந்த வெகுசன எழுச்சிப்போராட்டம் என்றார்அவர். (28)

## வடமராட்சி...

பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும். என்பதை வலியுறுத்தி இப்போராட்டம் இடம்பெறவுள்ளது. இப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் மாணவர்கள், பொது நிறுவனப் பிரதிநிதிகள் என அனைவரும் திரண்டு ஒருமித்த குரலில் தமிழ்த் தேசிய ஒற்றுமையை வெளிப்படுத்துவதுடன் தமிழ் மக்களின் "ஏக பிரதிநிதிகள் புலிகளே" "தனிப் பெருந்தலைவர் பிரபாகரனே" போன்ற தமிழ் மக்களின் அபிலா சைகள் அடங்கிய கோஷங்களையும் எழுப்புவதுடன் சனாதிபதி சந்திரிகா மற்றும் சர்வதேச நாடுகள் ஆகியவற்றிற்கும் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் மகஜர்களையும் இப்போராட்டத்தின்போது சமர்ப்பிப்பார். (33)

## வீரவணக்க...

தாக மாவீரரின் திருவுருவப் படம் பாரதிபுரம் பொது மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமை தாங்கினார். வீரவணக்க உரையினைக் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை மற்றும் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் அவர்களும் நிகழ்த்தினார்.

வீரவணக்க உரையினைத் தொடர்ந்து கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் மலர் மாலை அணிவித்து மலர் வணக்கத்தினை ஆரம்பித்துவைத்தார். மலர் வணக்கத்தினைத் தொடர்ந்து மாவீரர் கப்டன் சர்வனின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாகக் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. நினைவுக்கல்லை மாவீரர் கப்டன் சர்வனின் தாயார் திரைநீங்கம் செய்துவைத்தார். (சு)

எங்கே போனால்
ஆங்கிலம் கதைக்கலாம்?
இங்கிலிஷ் வேர்க்ஷொப்
[கோவிந்தன் கடைச்சந்தியருகே]
புதிய பிரிவு
27.12.2004
காலை 7.00 மணிக்கு ஆரம்பம்
(சி-11152)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது